RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 6 • டிசம்பர் 2025 • விலை ரூ.18/-

வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

எண்ணங்கள்

உறவுகள் மேம்பட

சிறப்பிதழ்

Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

குடும்பம், வேலை, தொழில், சமூகம் என எங்கும்
உறவுகளை உருவாக்கி வாழும் ரகசியம் அறிந்து
அந்த அன்புச் சங்கிலியில் இணைய வழிகாட்டும்

உறவுகள் மேம்பட
சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.

மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்.

உலகம் தண்ணீரால் சூழப்பட்டுள்ளது போல, மனிதர்களின் வாழ்க்கை உறவுகளால் சூழப்பட்டுள்ளது. ரத்த உறவு, குடும்ப உறவு, நட்புறவு, தொழில் உறவு, சமூக உறவு என மனிதர்களின் ஒவ்வொரு நாளும் உறவுகளால் பிணைக்கப்பட்டே நகர்கிறது. 'தனிமரம் தோப்பாகாது' என்பது வாழ்வியல் உண்மை. இயற்கையில் எதுவும் தனித்து இயங்குவதில்லை. இந்தப் பூமியில் உள்ள அனைத்தும் ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைவதும், உறவாடுவதும்தான் இயற்கை. பட்டாம்பூச்சிகள் இல்லை என்றால் மகரந்தச் சேர்க்கை நடக்காது. அது நடக்கவில்லை என்றால் செடி, கொடி, மரங்கள் பூக்காமல் போய்விடும். பழங்களை உண்ணும் பறவைகள், அதன் மிச்சமான விதைகளைப் பரப்பி ஒரு காட்டையே உருவாக்கிவிடுகின்றன. நம் கண்களுக்குத் தெரிந்தும், தெரியாமலும் இயற்கையோடு எல்லா உயிர்களும் உறவாடுகின்றன. இந்த உறவாடுதல் மனிதர்களுக்கும் அவசியமான பண்பாகும்.

ஒரு விதைக்குத் தண்ணீர் ஊற்றிக் கவனமாகப் பாதுகாத்து அக்கறையோடு வளர்த்தால் மட்டுமே மரமாகிறது. எல்லா வகையான உறவுகளும் அன்பாலும் அக்கறையாலும் மட்டுமே செழித்து வளர்கின்றன. உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்கும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் உறவுகளின் நன்மை பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. சக மனிதர்களுடன் நல்லுறவைப் பராமரிக்கும் மனிதர்களின் வெற்றி, பல மடங்கு அதிகமாக இருப்பதாக அதில் தெரியவந்தது. மேலும் அவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதாகவும் தெரிந்தது. நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களைக் கவனித்தாலே இது உண்மையெனப் புரிந்துவிடும்.

அன்பு, அக்கறை, நம்பிக்கை, புரிதல், மன்னிப்பு ஆகிய ஐந்து மந்திரங்களைப் பின்பற்றினால் உறவுகள் மேம்படும். எந்த உறவுக்கும் அன்புதான் ஆணிவேர். உறவு தொடங்கும் முதல் புள்ளியும் அதுதான். நெருக்கமான உறவுகள் அனைத்திலும் அன்பின் பிணைப்பு அதிகமாக இருக்கும். அன்பான மனிதர்களை வலிமையான உறவுகள் அரண் போலக் காத்து நிற்கும். அன்பு தாய்மையுணர்வு என்றால், அக்கறை தந்தையுணர்வு எனச் சொல்வது பொருத்தமாக இருக்கும். தன்னைச் சுற்றி இருப்பவர்கள் மீது அக்கறை செலுத்துபவர்கள் தலைமைப் பண்புள்ளவர்களாக இருப்பார்கள். தன் வளர்ச்சியை மட்டுமின்றி, தன்னோடு இருப்பவர்களின் வளர்ச்சியையும் உறுதி செய்வார்கள்.

நம்பிக்கை எந்த உறவிலும் அஸ்திவாரம் போன்றது. நம்பிக்கையின்மைதான் உறவில் விழும் முதல் விரிசல். நம்பிக்கையை உருவாக்க நிறைய காலம் எடுக்கும். நிரூபிக்க நிறைய உழைக்க வேண்டும். காலம் காலமாக உருவாகும் நம்பிக்கை, சில நொடிகளில் உடைந்துவிடுவதும் உண்டு. தனிப்பட்ட உறவாக இருந்தாலும், தொழில் சார்ந்த உறவாக இருந்தாலும், நம்பிக்கையை வளர்ப்பதில் கவனமாக இருக்க வேண்டும். 'நம்மை நம்பி இந்த வேலையை ஒப்படைச்சிருக்காங்க. இதைச் சரியா செய்யணும்' என நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

நம்பிக்கை மிகுந்த உறவு வலிமையானது என்றால், ஒருவரைப் புரிந்துகொள்ள எடுத்துக்கொள்ளும் முயற்சிதான், உறவுகளின் மீது பிடிப்பை உருவாக்கும். 'காதுகள் கேட்கத் தயாராக இருக்கும்போது, இதயம் பேசத் தொடங்கிவிடும்' என்பார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, 'நான் சொல்ல வருவது யாருக்கும் புரியவில்லை' என்ற ஆதங்கத்தோடு இருக்கும்போது, 'நான் புரிந்துகொள்ளத் தயாராக இருக்கிறேன்' என்று ஒருவர் முன்வரும்போது அந்த உறவில் பிணைப்பு சிறப்பாக இருக்கும்.

மன்னிப்புதான் உறவுகளை உயிர்ப்போடு வைத்திருக்கும் உயர்ந்த பண்பு. தவறு செய்யாத மனிதர்களே இருக்க முடியாது. தெரியாமல் முதன்முறையாக நடக்கும் தவறுகளுக்கு மன்னிப்பு அவசியம். 'இந்த முறை பரவாயில்லை. அடுத்த முறை இது நடக்காமல் பார்த்துக்கொள்ளவும்' எனச் சொல்லும்போது, அந்த உறவு உண்மையானதாக மாறிவிடும். உறவுகளைக் குற்ற உணர்விலிருந்து விடுக்கும் ஆற்றல் மன்னிப்புக்குத்தான் உண்டு.

காலங்கள் மாறினாலும் இந்த ஐந்து மந்திரங்களின் சக்தி மாறுவதே இல்லை. அன்பு, அக்கறை, நம்பிக்கை, புரிதல், மன்னிப்பு என்கிற ஐந்து மந்திரங்களையும் வார்த்தைகளின் மூலம் நன்றாக உணர்த்தமுடியும். அதேபோல உறவுகளை உடைக்கும் ஏவுகணையாகவும் நாம் உச்சரிக்கும் வார்த்தைகள் மாறும். 'வார்த்தைகளில் கவனமாக இருப்பவர்களே உறவுகளைப் பாதுகாக்கும் திறமை உள்ளவர்கள்' என உறுதியாகக் கூறலாம். '90% உறவுகள் உடைவதற்கு வார்த்தைகளே காரணம்' என்று ஹார்வர்டு பல்கலைக்கழக ஆய்வு சொல்கிறது.

வார்த்தைகளைப் பயன்படுத்துவது ஒரு கலை. அதைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்தால் வளர்ச்சியை உறுதி செய்வது எளிது. என் சொந்த அனுபவத்திலேயே அதைச் சொல்லமுடியும். ராம்ராஜ் காட்டன் நிறுவனம் தொடங்கிய காலத்தில் நானே முதல் தொழிலாளி. வேட்டி விற்பனையில் ஆந்திராவுக்கு முக்கிய இடம் உண்டு. தெலுங்கு மொழி பேசும் எளிய மக்கள் பாரம்பரிய உடை அணிவதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள். ஆந்திராவில் உள்ள ஒரு நகரில் பெரிய ஜவுளிக்கடைக்கு வேட்டி விற்பனை செய்யும் முயற்சியுடன் தினமும் போய் அந்தக் கடை முதலாளியைப் பார்த்தேன். எனக்குத் தெலுங்கு மொழி தெரியாது. புதிதாக யாரோ ஒருவர் தமிழ்நாட்டில் இருந்து வந்து ஆர்டர் கேட்பதில், முதலாளிக்கு ஆர்வம் இல்லை. ஏதோ ஒரு காரணத்தால், அவர் எனக்கு ஆர்டர் தரவே இல்லை. ஒவ்வொரு முறையும் நான் அவர் முன்பு போய் நிற்பேன். அவரும் 'ஆர்டர் இல்லை. போப்பா' என்பார். விரட்டி விட்டாலும் ஒருத்தன் அடிக்கடி வந்து நிற்பது அவருக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் கோபமாக, 'உனக்குச் சொன்னா புரியாதா? ஏன் இப்படி வர்ற?' என்று கேட்டார். நான் அவரிடம், 'இங்கு வந்து உங்களைப் பார்த்து வணங்கிவிட்டுப் போனால், எனக்கு வெளியே நிறைய ஆர்டர் கிடைக்கிறது. உங்கள் முகராசி காரணமாகத்தான் எனக்கு நல்லது நடக்கிறது என நம்புகிறேன். அதனால்தான் வந்து உங்களைப் பார்க்கிறேன். தவறாக நினைக்க வேண்டாம்' என்று சொன்னேன்.



The Culturepreneur

'உங்கள் முகராசியால் எனக்கு வியாபாரம் நன்றாக நடக்கிறது' என்று நான் சொன்னதும் அவர் நெகிழ்ந்து போய்விட்டார். அன்றே எனக்கு ஆர்டர் கொடுத்தார். இன்றுவரை அந்த உறவு தொடர்கிறது. அவரின் பிள்ளைகள் வியாபாரத்துக்கு வந்துவிட்டனர். நாற்பது ஆண்டுகளைக் கடந்த பிறகும் இன்றும் ஆந்திராவில் எங்களுக்கு அந்தக் கடை முதலாளி முக்கியமான டீலராக இருக்கிறார். அலட்சியமாக விரட்டிவிட்டவர், நான் சொன்ன வார்த்தைகளின் காரணமாக இனிய உறவாக மாறினார். தொழில் தொடங்கிய ஆரம்பக் காலத்திலேயே எனக்கு இது சிறந்த அனுபவப் பாடமாக இருந்தது. தொழிலில் எதிர்மறை வாரத்தைகளைப் பேசாமல், நேர்மறையான வார்த்தைகளைப் பேசுவதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறேன். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் பொறுப்பாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், ஊழியர்கள் என அனைவரும் பாசிட்டிவான எண்ணங்களோடும் வார்த்தைகளோடும் வர்த்தகம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே இருப்பேன்.

உறவுகள் மேம்பட்டால் குடும்பம் மேம்படும், வர்த்தகம் மேம்படும், வாழ்க்கை மேம்படும். உறவுகளைக் கொண்டாடி, இணைந்து பயணிக்கும்போது நிறைவான வாழ்வனுபத்தைப் பெறுவோம். அனைத்து வகையிலும் நல்லுறவு தழைத்து ஓங்கட்டும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

கே.ஆர்.நாகராஜன்

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

உறவுகளைப் போற்றுவோம்!

எங்கெங்கோ பிரிந்து வாழும் உறவுகள் ஒன்றுகூடும் நாட்களாக விசேஷ தினங்கள் இருக்கின்றன. உறவினர் வீட்டில் திருமணம் என்றாலோ, வேறு ஏதேனும் சுப நிகழ்ச்சிகள் என்றாலோ, எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியிலும் பயணம் செய்து செல்லும் பலரும் இதையே நமக்கு உணர்த்துகிறார்கள். உறவுகளைப் போற்றி, அவர்களின் அன்பில் மகிழ்வதே மகிழ்ச்சியை முழுமையாக்கும்.

உறவுகளைவிட மேலான எதுவும் இல்லை. இதை உணர்த்தும் கதை இது. ஒரு மகாராணிக்குக் குழந்தைகள் கிடையாது. எனவே, நாட்டில் இருக்கும் குழந்தைகளில் யாராவது ஒருவரை தன் வாரிசாகத் தத்தெடுக்க நினைத்தார். இதற்காக ஒரு போட்டி வைத்தார். போட்டியில் கலந்துகொண்ட குழந்தைகள் அனைவரும் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டனர். ஒவ்வொருவர் கையிலும் அன்பாக ஒரு விதையைக் கொடுத்தார் மகாராணி.

“இந்த விதையை ஒரு தொட்டியில் நட்டு, முளைக்கும் செடியை நன்கு வளர்த்து வாருங்கள். இந்தச் செடியில் பூக்கும் பூவை அடுத்த ஆண்டு இதே நாளில் கொண்டு வாருங்கள். யார் மிகச் சிறந்த பூவைக் கொண்டு வருகிறார்களோ, அவரே இந்த நாட்டின் இளவரசி” என்றார் மகாராணி.

எல்லோரும் விதையுடன் தங்கள் வீடுகளுக்குக் கிளம்பினார்கள். இவர்களில் ஒரு சிறுமி, தொட்டியில் அந்த விதையை நட்டுத் தினமும் தண்ணீர் ஊற்றி வந்தாள். ஒரு வாரம் போனது... எதுவுமே முளைக்கவில்லை. ஒரு மாதமும் ஆனது. அந்த விதை முளைக்கவே இல்லை. ஆனால், அவள் தண்ணீர் ஊற்றுவதை நிறுத்தவே இல்லை.

ஓராண்டு கடந்து போட்டி தினம் வந்தது. எதுவுமே முளைக்காத செடியிலிருந்து எந்தப் பூவைக் கொண்டுபோவது? அவளுக்குத் தயக்கம். அரண்மனைக்குப் போகாமல் விட்டுவிடலாமா என யோசித்தாள். என்றாலும், ‘போய் உண்மையைச் சொல்லிவிடலாம்’ எனக் காலித் தொட்டியுடன் அரண்மனைக்குப் போனாள்.

அங்கே எல்லோரும் விதவிதமான பூக்களோடு வரிசையில் நின்றிருந்தனர். ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு



வண்ணத்தில்இருந்தது.பலபூக்கள்வாசனையில்மயக்கின. எது சிறந்த பூ என முடிவுசெய்ய முடியாத அளவுக்கு அத்தனையும் இருந்தன. காலிப் பூந்தொட்டியுடன் போன சிறுமியைப் பார்த்து மற்றவர்கள் சிரித்தனர். சிறுமிக்கு அழுகை வந்தது. கண்ணீர் சிந்தியபடி கடைசியில் நின்றாள்.

மகாராணி வந்தார். அத்தனை சிறுமிகளும் வைத்திருந்த வண்ண வண்ணமான பூக்களில் எதையும் அவர் கவனிக்கவில்லை. காலிப் பூந்தொட்டியை வைத்திருந்த சிறுமியிடம் நேராக வந்தார். சிறுமியின் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடிச் சிரித்தார். ''நான் கொடுத்த விதைகள் எல்லாமே வேகவைக்கப்பட்டவை. எந்த விதையும் முளைக்க வாய்ப்பில்லை. இவர்கள் எல்லோரும் என்னை ஏமாற்ற ஏதேதோ பூக்களுடன் வந்திருக்கிறார்கள். நீதான் உண்மையுடன் வந்திருக்கிறாய். எனவே, நீதான் இளவரசியாகத் தகுதியானவள்'' என்றார் மகாராணி.

உண்மை கசப்பாக இருந்தாலும், உறவுகள் மத்தியில் அதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். நம் உறவுகளுடன் பழகுவதற்குத் தனியான அனுபவம் தேவை. அதைப் பெற என்ன செய்ய வேண்டும்?

● நினைத்த நிமிடத்தில் எவருடனும் பேச நம்மிடம் ஸ்மார்ட் போன் இருக்கிறது; நினைத்த உடனே எவ்வளவு தூரமும் சென்றுவிட விமானமும் இருக்கிறது. ஆனால், நம் உறவினர் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்துகொள்ள எந்தக் கருவியும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. சிறந்த உரையாடல் மட்டுமே அதற்கான கருவி. அவர் இப்படி நினைத்திருப்பாரோ, இவர் தவறான முடிவெடுத்திருப்பாரோ என மனதுக்குள் குழப்பிக்கொள்ளாமல், எதுவாக இருந்தாலும் வெளிப்படையாகப் பேசுங்கள்.

● நீங்கள் நல்ல நோக்கத்துடன் செய்யும் ஒரு விஷயம், தவறான அர்த்தத்தில் புரிந்துகொள்ளப்படலாம். நீங்கள் மிக முக்கியம் என நினைக்கும் ஒரு விஷயத்தை உங்கள் குடும்பமே அலட்சியப்படுத்தலாம். 'இதை இப்போது செய்தாக வேண்டுமா' என நீங்கள் நினைக்கும் ஓர் அற்ப விஷயத்தை ஒட்டுமொத்தக் குடும்பமுமே சேர்ந்து செய்யலாம். சகித்துக்கொள்ளுங்கள்.

● வெளிப்படுத்தாத அன்பால் எந்தப் பயனும் இல்லை. நீங்கள் எவ்வளவு தூரம் நேசிக்கிறீர்கள் என்பதை உறவுகளிடம் சொல்லுங்கள். அப்போதுதான், அவர் எந்த அளவுக்கு உங்களை நேசிக்கிறார் என்பதும் தெரியும். உறவுகளுக்குள் கோபம், பொறாமை, வருத்தம் என எதிர்மறையாக இருக்கும் அத்தனை உணர்வுகளையும் கரைக்கும் ஒரே மருந்து, அன்பு.

● உங்கள் உறவினர்களை உணர்ந்துகொள்ள, குடும்ப நண்பர்களிடம் பேசுங்கள். உங்கள் உறவினரைப் பற்றி ஓர் அபிப்ராயம் வைத்திருப்பீர்கள். அந்த அளவுகோலை வைத்தே அவரை எப்போதும் அளப்பீர்கள். ஆனால், உங்கள் குடும்ப நண்பர், அந்த உறவினரைப் பற்றி வித்தியாசமான ஒரு விஷயத்தைச் சொல்வார். "உங்களின் பெருமையை இப்போதுதான் தெரிந்துகொண்டேன்" என அதை வைத்து உறவினரிடம் பேசும்போது, உறவு இன்னும் வலுவாகும்.

● கோபத்தில் எந்த முடிவும் எடுக்காதீர்கள். பேசவும் செய்யாதீர்கள். கோபத்தில் உதிர்க்கும் வார்த்தைகள் மனதில் ஆழமாகப் போய்த் தைத்துக்கொள்ளும். அதன்பின் நீங்கள் என்ன செய்தும் அந்தப் புண்ணை ஆற்றமுடியாது. கோபமாக இருக்கும்போது, பேசும் விஷயத்தை மாற்றிவிடுங்கள்; அல்லது அங்கிருந்து அகன்றுவிடுங்கள்.

● எவ்வளவு பிஸியாக இருந்தாலும், உறவுகளுடன் நேரம் செலவிடத் தயங்காதீர்கள். சுப நிகழ்ச்சிகள், பண்டிகைகள் போன்ற தருணங்களில் இப்படி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உடல்நிலை சரியின்றிப் படுக்கையில் இருக்கும்போதோ, உறவுகள் யாரையாவது இழந்துவிட்டுத் துக்கத்தில் இருக்கும்போதோ, உங்கள் நேரத்தைச் செலவிட்டு ஆறுதலாக இருங்கள்.

● உங்கள் உறவினர் என்பதாலேயே, அவரும் உங்களைப் போலவே இருக்க வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். ஒவ்வொருவரும் வளர்ந்த பின்னணி, இருக்கும் சூழல் ஆகியவற்றைப் பொறுத்து வித்தியாசமான பண்புகளுடன் இருப்பார்கள். அவர்களின் கருத்துகளும் வேறுபடலாம். இந்த வித்தியாசங்களைப் புரிந்துகொள்ளுங்கள்.

● ஒரே விஷயத்தை 60 வயது முதியவர் ஒரு மாதிரி பார்ப்பார். 20 வயது இளைஞர் வேறு மாதிரி பார்ப்பார். 'கிழவருக்கு என்ன சொல்லியும் புரியலையே' என எரிச்சலும் அடையாதீர்கள்; 'முளைச்சு மூணு இலை விடலை. எப்படி பேசுது பார்' என்று கோபமும் கொள்ளாதீர்கள். அவர்கள் வயதின் தவறை, தலைமுறையின் தவறை, தனிப்பட்ட தவறாகக் கருதாதீர்கள்.

● நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், உங்களுக்கு என்ன தேவை, நீங்கள் எப்படிப்பட்ட சூழலில் இருக்கிறீர்கள் என்பதை எப்போதுமே வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள். நீங்கள் யாரிடமாவது உதவி கேட்கும்போதும், உங்களிடம் யாராவது உதவி கேட்கும்போதும், இந்த வெளிப்படைத்தன்மை உங்களுக்கு உதவும். ●

பகிர்ந்துகொள்ள உறவு தேவை!

வங்கிக்கணக்கில் லட்சக்கணக்கில் பணம், பிரமாண்டமான வீடு, சொகுசு கார் என்று எல்லா வசதிகளும் இருந்தாலும், அன்பு காட்ட உறவுகள் இல்லாத வாழ்க்கை வெறுமையானது. இந்த எல்லா வசதிகளையும் பகிர்ந்துகொள்ளக் குடும்பம் வேண்டும். இந்த வளர்ச்சியைப் பார்த்துப் பெருமிதப்படுவதற்கு உறவுகள் வேண்டும். இதெல்லாம் இல்லாமல் வாழ்க்கை முழுமை அடையாது. ஏனெனில் எவரும் தன் பிரச்னைகளையும் மகிழ்ச்சியையும் பணத்திடமோ, காரிடமோ போய் பகிர்ந்துகொள்ள முடியாது.

இன்று வாழ்க்கையே பணத்தின் பின்னால் ஓடும் ஓட்டமாக பலருக்கு மாறிவிட்டது. வாழ்க்கையை நன்கு வாழ்வதற்குப் பணமே முக்கியம் என்பதை மறுக்க முடியாது. ஏனெனில், அன்பான உறவினர்கள்கூட எவரையும் நீண்ட காலம் பராமரித்துச் சோறு போடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், பணத்தின் பின்னால் ஓடும்போது பாசத்தை மறந்துவிடக்கூடாது.



உன்னதமான உறவுப் பிணைப்பு!

தாய்மாமன் சீர், தாய்வீட்டுச் சீதனம் என்பது போல நம் பாரம்பரியத்தில் பல சடங்குகளில் உறவுகள் பிணைக்கப்பட்டுள்ளன. குழந்தையைத் தாய்மாமன் மடியில் அமரவைத்தே மொட்டை அடிப்பது வழக்கம். பெண்களுக்கு ஒவ்வொரு தீபாவளியிலும் தாய்வீட்டுச் சீதனம் வந்துவிடும். திருமணச் சடங்குகளில் அத்தைகளின் பங்கு அதிகம். பங்காளிகள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், துக்க காரியத்தில் வந்து பங்கெடுக்க வேண்டும். சம்பந்தி வீட்டினர் அந்தத் துக்கத்தில் முறை செய்ய வேண்டும்.

வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் உறவுகளைப் பிணைத்து, தலைமுறைகள் தாண்டியும் அந்த உறவுப் பிணைப்பு தொடர்வது போலச் செய்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இந்த அளவுக்கு உறவுகளைப் போற்றும் பண்பாடு உலகில் வேறு எங்கும் இருக்க முடியாது. அந்தச் சமூக மரபு அறுந்துவிடாமல் உறவுகளைப் பாதுகாப்பது நமது கடமை.

சொல்லிக் கொடுங்கள்!

நிறைய பேர், 'உறவினர்கள் என்றாலே மோசமானவர்கள்' என்ற எண்ணத்துடன் இருக்கிறார்கள். நம் வீடுகள் சுருங்கியது போலவே மனதும் சுருங்கிவிட்டது. இதற்கெல்லாம் காரணம், 'உறவினர்கள் பொல்லாதவர்கள்' என்று சிறுவயதிலிருந்தே பல பெற்றோர்கள் சொல்லிக்கொடுத்துப் பிள்ளைகளை வளர்ப்பதுதான்.

உறவில் எல்லோருமே அன்பை மட்டுமே எதிர்பார்க்கிறார்கள். கண்டிப்பு காட்டும், உரிமையோடு கோபப்படும் மனிதர்களைப் பலருக்கும் பிடிப்பதில்லை. அதனால்தான் குடும்பம், உடன்பிறந்தவர்கள் தாண்டி மற்ற உறவுகளை ஒதுக்கி வைக்கிறார்கள். அவர்களில் பொறாமைக்காரர்கள் சிலர் இருக்கலாம், அதற்காக 'எல்லா உறவினர்களும் பொறாமைக்காரர்கள்' என்று பிள்ளைகளிடம் சொல்லிவைப்பது சரியல்ல! மகனிடம் அம்மா காட்டும் அதே அளவு அன்பினைத் தூரத்து உறவினர் ஒருவரும் பொழிவார் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் அந்த மனிதரிடம் சில நல்ல பண்புகள் இருக்கும் அவற்றை மட்டுமே பார்ப்பதற்குப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். அவர்கள் உறவுகளை நேசித்து வளர்வார்கள்.

கொடுப்பதும் பெறுவதுமே உறவு!

ஒரு பெரிய விபத்து ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ரத்த தானம் கொடுக்க மருத்துவமனையில் ஒரு கூட்டம் குவிந்துவிடுவதைச் செய்திகளில் படித்திருக்கிறோம். முகம் தெரியாதவர்களுக்கு உதவி செய்யும் இதுபோன்றவர்கள், தங்கள் உறவுகளுக்கு இன்னும் அதிகமாக அல்லவா உதவி செய்வார்கள்?

ஒருவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவமனைக்கு அவரை அழைத்துப் போன தகவல் கேள்விப்பட்டதும், அதே ஊரிலிருக்கும் உறவுக்காரர்கள் சிலர் உடனே அங்கு வந்தார்கள். 'திடீரென மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய சூழல், அவரிடம் பணம் இருக்கிறதோ, இல்லையோ' என்ற அக்கறையில் அவர்கள் கையோடு பணமும் எடுத்து வந்தார்கள். இன்னொரு உறவினர் அந்த அளவுக்கு வசதியானவர் இல்லை. சிகிச்சை பெற்றவரின் வீட்டுக்குப் போய், அவரின் குழந்தைகளுக்குச் சமைத்துக் கொடுத்து அவர்களுக்கு உதவியாக இருந்தார் அவர். தூரத்து உறவினரின் மகன் ஒருவன் அந்த நகரில் ஹாஸ்டலில் தங்கிப் படித்தான். அவன் தினமும் இரவு நேரத்தில் மருத்துவமனைக்கு வந்து, இரவு முழுக்கத் தூங்காமல் அவர் அருகிலிருந்து அக்கறையுடன் பார்த்துக்கொண்டான். இத்தனைக்கும் அவன் இதற்கு முன்பு அவரைப் பார்த்ததுகூடக் கிடையாது. 'நம் உறவினருக்கு இப்படி ஒரு பிரச்னை' என்று அப்பா சொன்னதால் அவசரமாக வந்தான். இதுதான் உறவின் சக்தி.



உறவுகள் சூழ வாழ்வோம்!

தேர்வுக்காக இரவு முழுக்கப் படித்துவிட்டு, மதியம் கொஞ்சம் தூங்கலாம் என்று படுத்த ஒரு பெண்ணுக்குக் கோபம் வந்தது. காரணம், சில உறவினர்கள் வீட்டுக்கு வந்து அவர் அம்மாவுடன் சத்தம்போட்டுப்பேசித்தூக்கத்தைக் கெடுத்ததுதான். ஆனால், அந்தப் பெண் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று பாஸானபோது முதலில் ஓடிவந்து இனிப்புக் கொடுத்தவர்கள் அந்த உறவுகள்தான்.

சாப்பிடும் நேரத்தில் உறவுக்காரப் பெண்மணி ஒருவர் வந்து இங்கிதமே இல்லாமல் பேசிக்கொண்டிருந்தது ஓர் இளைஞனுக்கு கோபத்தை வரவைத்தது. அவனால் நிம்மதியாகச் சாப்பிட முடியவில்லை. ஆனால், திடீரெனப் பாட்டிக்கு உடம்பு முடியாமல் போய், அவன் அம்மா ஊருக்குப் போக நேர்ந்தபோது, அவனுக்குச் சாப்பாடு சமைத்துக் கொண்டுவந்தது அந்த உறவுக்காரப் பெண்மணிதான்!

கிராமத்து வாழ்க்கை நமக்கு இனிமையாகத் தெரிவதற்குக் காரணம், நம் உறவுகளே! வீட்டைச் சுற்றிலும் உறவுக்காரர்கள் இருப்பார்கள். மகிழ்ச்சியான விசேஷங்களில் அவர்கள் நம்முடன் இணைந்து அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வார்கள். துன்பமான நேரங்களில் வந்து தோள் கொடுத்து, அந்தத் துன்பச் சுமையைக் குறைப்பார்கள்.

கிராமத்திலிருந்து பிழைப்புக்காகவும் வேலைக்காகவும் நகரத்துக்கு வரும் பலரும் முதலில் இழப்பது இந்த உறவுகளின் அரவணைப்பைத்தான்! இதை ஈடுசெய்ய, நம் உறவுகள் இருக்கும் பகுதியில் குடியேறுவதுதான் ஒரே வழி. அந்த உறவினர்களின் அருமையைக் குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அந்த உறவினர்களுக்கு உதவி தேவைப்படும்போது நாம் செய்ய வேண்டும். நமக்கும் அவர்களின் உதவி தேவைப்படும். அப்போது உரிமையாக அதைக் கேட்க முடியும்.

உறவுகளை மேம்படுத்தும் விதிகள்!

- பிரார்த்தனை என்பது என்ன? அது ஒரு காரில் ஏதாவது ஒரு சக்கரம் பழுதானால் அவசரத்துக்குப் பயன்படும் ஸ்டெப்னி சக்கரம் போன்றதல்ல. பிரார்த்தனை என்பது காரையே இயக்கும் ஸ்டியரிங் சக்கரம் போன்றது. அதுதான் உங்களைச் சரியான பாதையில் செல்ல வைக்கிறது. உறவுகளை இனிதாக்கப் பிரார்த்தனை செய்யுங்கள்.
- ஒரு காரின் முன்புறத்தில் சாலையைப் பார்ப்பதற்காக இருக்கும் கண்ணாடி பெரிதாக உள்ளது. ஆனால், பின்னால் வரும் வாகனங்களைக் கவனிப்பதற்காக இருக்கும் ரியர் வியூ மிர்ரர் சிறியதாக உள்ளது. 'நமது கடந்த காலம் முக்கியம் அல்ல. எதிர்காலமே முக்கியம். முன்னால் தெரிவதைக் கவனித்து, முன்னேறி போய்க்கொண்டே இரு' என இது உணர்த்துகிறது. உறவுகளின் கடந்தகாலத் தவறுகளை மறந்துவிடுங்கள்.
- வாழ்வில் எல்லா விஷயங்களும் தற்காலிகமானவையே! அவை நன்றாக நிகழ்ந்தால் மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள். ஏனெனில், அவை தற்காலிகமானவை. பின்னால் அனுபவிக்க முடியாது. தவறாக நிகழ்ந்தால் வருத்தப்படாதீர்கள். ஏனெனில், அது தற்காலிகமானது. விரைவில் இது சரியாகும். இதனால் மகிழ்ச்சி நிரந்தரமானால், உறவுகள் இனிதாகும்.
- பழைய நண்பர்கள் தங்கம் போன்றவர்கள். புது நண்பர்கள் வைரம் போன்றவர்கள். உங்களுக்குப் புதிதாக வைரம் கிடைத்தால், பழைய தங்கத்தை மறந்துவிடாதீர்கள். ஏனெனில், தங்க நகைகளில்தான் வைரங்கள் பதிக்கப்படுகின்றன.
- உங்கள் பிரச்னைகளைக் கடவுள் தீர்த்து வைத்தால், அவரது சக்தியில் நம்பிக்கை கொள்ளுங்கள். எவ்வளவு பிரார்த்தனை செய்தும் அவர் தீர்க்கவில்லை என்றால், உங்களால் சுயமாகவே அதைத் தீர்த்துவிட முடியும் என்று கடவுள் நம்புவதாக அர்த்தம்.
- நேற்று நிகழ்ந்த தவறையும், நாளை எதிர்கொள்ளப் போகும் நெருக்கடியையும் இன்று நீங்கள் கவலைப்படுவதன் மூலம் மாற்ற முடியாது. இன்றைய உங்களின் நிம்மதி மட்டுமே அதில் பறிபோகும். நிம்மதியை இழக்காமல் இருந்தால், உறவுகளை இழக்க மாட்டீர்கள்.
- மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடாதீர்கள். உங்கள் நிம்மதியை இழக்காதீர்கள். அவர்களின் வாழ்க்கை வேறு, உங்களின் வாழ்க்கை வேறு.
- உங்களைத் தவிர உங்கள் மகிழ்ச்சிக்கு வேறு யாரும் காரணமாக இருக்க முடியாது. அந்த மகிழ்ச்சியை உறவுகளிடமும் நண்பர்களிடமும் தேடாதீர்கள். உங்களிடமிருந்து மகிழ்ச்சியை அவர்களுக்குக் கொடுங்கள்.
- 'இன்றைக்கு இதுதான் நடக்கும்' என்ற நினைப்புடன் எந்த நாளையும் எதிர்கொள்ளாதீர்கள். வாழ்க்கையில் எதுவும் நிச்சயம் இல்லை. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவும், பெற்றுக்கொள்ளவும் மறக்காதீர்கள்.
- உங்களின் பிரச்னைகளின் அளவு, அவற்றைத் தீர்க்க முடிகிற உங்களின் திறமையைவிடச் சிறியதுதான். எனவே, உங்கள் பிரச்னைகளை உயர்த்தியும் மதிப்பிடாதீர்கள். உங்கள் திறமையைக் குறைத்தும் மதிப்பிடாதீர்கள். ●

உறவுகள் மேம்பட!

- அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும், எந்தப் பிரச்னையையும் நாசூக்காகக் கையாளுங்கள்; விட்டுக் கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்தே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்வாக நினைத்துக் கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கு அதிகமாய், தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடமும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ, சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் அப்படியே நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள்.
- மற்றவர்கள் கருத்துகளை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்துகொள்ளாதீர்கள்.
- பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து விடுங்கள். அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்னைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல், நீங்களே பேச்சைத் தொடங்க முன்வாருங்கள்.

கரூர் விஷன் நிகழ்வில் ராம்ராஜ்!

‘வளரும் கரூர்’ என்ற கருத்தை மையமாகக் கொண்டு கரூர் CII சார்பில் ‘கரூர் விஷன் 2030’ என்ற மாபெரும் கருத்தரங்கம் கரூர் அட்லஸ் திருமண அரங்கில் நடைபெற்றது. தமிழக அரசின் முன்னாள் அமைச்சர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இன்றைய காலச் சூழலில் தொழில்துறை சந்தித்து வரும் சிக்கல்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் திரு. நாகராஜன் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார். இந்த விழாவில் கரூர் CII சேர்மன் திரு. பிரபு அவர்கள் வரவேற்புரையாற்றினார். CII நிர்வாகிகளும் பல தொழிலதிபர்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

இளம் தொழில் முனைவோர் மாநாட்டில் ராம்ராஜ்!

இளம் தொழில் முனைவோர் கூட்டமைப்பின் 2025–ம் ஆண்டு மாநாடு, 21.11.2025 வெள்ளிக்கிழமை அன்று தஞ்சை விஜயா மஹால் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். ‘இளம் தொழில் முனைவோருக்குத் தேவையான தன்னம்பிக்கையின் சிறப்புகள், சவால்களை எதிர்கொண்டு முன்னேறுவது, தொடர் வெற்றிக்கான நுட்பங்கள், பெற்ற வெற்றியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்’ ஆகியவை குறித்து அவர் சிறப்புரையாற்றினார்.

தஞ்சாவூர் YES அமைப்பின் Governing Council Member & தஞ்சாவூர் மெஜஸ்டிக் மகாராஜா நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநர் ஜனாப். அர்ஷத் அஹமது அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொழிலில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபடுவதற்கு திரு. K.R. நாகராஜன் அவர்கள் உரை உதவியாக இருந்தது எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

ஜமக்காளம் கொண்டாட்டத்தில் ராம்ராஜ்!

பவானி ஜமக்காளத்தைப் பெருமைப்படுத்துவதற்காக 22.11.2025 அன்று கோவை குமரகுரு கல்லூரியில் 'ஜமக்காளம்–மரபின் கொண்டாட்டம்' விழாவும், ஜமக்காளத்தின் மேன்மைகளை நினைவு கூரும் 'என்றென்றும் ஜமக்காளம்' நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் தலைமை தாங்கி, நூலை வெளியிட்டு உரையாற்றினார். TSSCயின் CEO முனைவர் ஷப்னா மிஸ்ரா அவர்கள் நூலைப் பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார். நூல் ஆசிரியர் திரு. அமர் ரமேஷ், நூல் உருவான கதை குறித்துப் பேசினார். விழாவின் நிறைவில் ஜமக்காளம் நெசவாளர்கள் மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் வரவேற்புப் பெற்றிருக்கும் நமது பாரம்பரியத்தின் அடையாளமான ஜமக்காளம் குறித்தும், மரபு மாறாமல் அதை நெய்யும் நெசவாளர்களின் மேன்மை குறித்தும் திரு.K.R. நாகராஜன் அவர்கள் உரையாற்றினார். பாரம்பரியத்தை மறவாமல் இருக்கவும், தொடர்ந்து அதனை மேம்படுத்தவும் இந்த விழா துணையாக இருந்ததாக, விழாவில் பங்கேற்றவர்கள் கூறி மகிழ்ந்தனர்.

CA மாணவர்கள் கருத்தரங்கில் ராம்ராஜ்!

இந்திய CA இன்ஸ்டிடியூட் சார்பில் CA மாணவர்களுக்கான தேசியக் கருத்தரங்கு 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, மாணவர்களிடையே சிறப்புரை ஆற்றினார்.

'வாழ்வில் உண்மையான வெற்றி என்பது எது? வெற்றி என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதோடு முடிந்து விடுவதில்லை. வெற்றி என்பது ஒரு தொடர் பயணம்' என்பது பற்றித் தனது அனுபவங்களோடு இணைத்து உரையாற்றினார். சுமார் ஆயிரம் மாணவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு, வெற்றி என்பதன் புதிய பரிணாமத்தை திரு. K.R. நாகராஜன் அவர்கள் உரையால் தெரிந்து கொண்டோம் என்று மகிழ்ச்சியுடன் கூறினர்.

இந்த விழாவில் தென்னிந்திய CA இன்ஸ்டிடியூட் சேர்மன் திருமதி. ரேவதி பத்மநாபன், ஒருங்கிணைப்பாளர் திருமிகு. ராஜலட்சுமி மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வீட்டுக்கு வெளியே உறவுகள் மேம்பட!

வீட்டிலும், உறவுகள் மத்தியிலும், நண்பர்கள் வட்டாரத்திலும் இனிமையாகப் பழகி நல்ல பெயர் எடுக்கும் பலர், தங்கள் பணியிடத்தில் வேறு மாதிரி முகம் காட்டுகின்றனர். இதனால் 'சிடுமூஞ்சி', 'டென்ஷன் பார்ட்டி' எனப் பல பட்டப்பெயர்கள் அவர்களுக்குச் சூட்டப்படுகின்றன. வேலை, வியாபாரம், தொழில் என எதுவாக இருந்தாலும், அங்கு உறவுகளை மேம்படுத்த சில வழிகள்:

• நேர்மறையாகப் பேசுங்கள். அலுவலகத்தில் மேலதிகாரி தொடங்கி, கீழ்நிலை ஊழியர்கள் வரை ஒவ்வொருவரும் வெவ்வேறு மனநிலையில் இருப்பார்கள். எதிர்மறையான வார்த்தைகள் அவர்களைச் சீண்டக்கூடும். "ஏன் லேட்?" என்பதற்கும், "கொஞ்சம் சீக்கிரமே வந்திருக்கலாமே!" என்பதற்கும் ஒரு வார்த்தைதான் வித்தியாசம். ஆனால், இரண்டும் தரும் விளைவுகள் வித்தியாசமானவை. தொழில் மற்றும் வியாபாரத்தில் விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்களிடம் இப்படி நேர்மறையாகப் பேசுபவர்கள் எப்போதும் உயர்கிறார்கள்.

• உங்களுக்கு மேலே இருப்பவர்களிடம் இங்கிதமாகப் பேசுங்கள். அவர்கள் ஏதோ ஒரு விஷயத்தை ஆர்வமாகச் சொல்வார்கள். அது தவறாக இருந்தாலும், "இது மோசமான யோசனையாக இருக்கிறதே, இது சரி வராது" என்று முகத்தில் அடித்தது போலப் பேசாதீர்கள். அவர்கள் அதைக் கடுமையான விமர்சனமாக எடுத்துக்கொண்டு மனம் புண்படக்கூடும். "நீங்கள் சொல்வது நல்ல யோசனை, அதை இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும்" என்று சரியான பாதையைக் காட்டுங்கள்.

• அனுபவசாலிகளையும் புதிதாகப் பணிக்கு வருவோரையும் ஒன்றாக வைத்துக்கொண்டு யோசனைகள் கேட்காதீர்கள். புதிதாக வரும் ஒருவர் ஆர்வத்துடன் ஏதேதோ சொல்வார். அனுபவசாலியோ அதையெல்லாம் நிராகரித்து, "இதெல்லாம் ஏற்கனவே செய்த விஷயங்கள்" என்று சொல்வார். இதனால் புதியவர்களின் சிந்தனையே முடங்கி, அவர்கள் எதையுமே சொல்ல மாட்டார்கள். புதுப்புது யோசனைகள் வராமல் போய்விடும்.

• ஒருவரைக் கண்டிப்பதைத் தனிப்பட்ட முறையிலும், பாராட்டுவதைப் பலர் முன்னிலையிலும் செய்யுங்கள். ஒருவர் செய்யும் தவறுகளுக்காக அவரைத் தனியாகக் கண்டிக்கும்போது, அவர் பலர் முன்னிலையில் தலைகுனியும் சூழலைத் தவிர்க்கிறீர்கள். அவர் தனிப்பட்ட முறையில் காயப்படாமல், தான் செய்த தவறை மட்டும் நினைத்து வருந்துவார். பலர் முன்னிலையில் பாராட்டும்போது, அவர் பெருமிதம் அடைந்து இன்னும் சிறப்பாக உழைப்பார்.

• விமர்சனங்களைக்கூடப் பக்குவமான வார்த்தைகளால் சொல்லுங்கள். தவறு செய்த ஒருவரைக் கோபமாகத் திட்டினால், அவருக்கும் கோபம்தான் வரும். "உங்களிடம் இதை எதிர்பார்க்கவில்லை" என்று சொன்னால், அவர் கூனிக் குறுகிப் போவார். அடுத்த முறை தவறு செய்ய மாட்டார்.

● எதையும் தெளிவாகப் பேசிக் கேட்டுக்கொள்ளுங்கள். அடுத்தவர்களின் செயல்களைப் பார்த்து, 'இதற்கு அர்த்தம் இதுதான்' என நீங்களாக யூகித்துக்கொள்ளாதீர்கள். பல இடங்களில் தேவையில்லாத மனக்கசப்புகள் ஏற்பட இதுவே காரணம். ஒரு விற்பனையாளர் திடீரெனப் பணம் கேட்டு நெருக்கடி கொடுக்கலாம். 'யாரோ போட்டியாளர் பேச்சைக் கேட்டு இப்படிச் செய்கிறார்' என யூகம் செய்யாதீர்கள். ஒரு பணியாளர் திடீரென லீவ் போடலாம். 'அவர் வேறு எங்கோ வேலைக்கு முயற்சி செய்கிறார்' எனக் கற்பனை செய்யாதீர்கள். எதையும் வெளிப்படையாகக் கேட்டுவிடுங்கள்.

● நீங்கள் பணிபுரியும் சூழலுக்கு என்று சில உடை விதிகள், உணவு விதிகள் போன்றவை இருக்கலாம். அந்த விதிகளுக்கு மதிப்புக் கொடுங்கள். விதிவிலக்காக இருப்பவர்கள், மற்றவர்களின் கவனத்தைக் கவரலாம். ஆனால், மதிப்புப் பெறுவதில்லை.

● அடுத்தவர்களின் தவறுகளைக் கண்டுபிடித்துக் குறை சொல்வது போன்ற சுலபமான பணி இந்த உலகத்தில் இல்லை. ஆனால், அதைச் செய்பவர்களுக்கு யாரும் நண்பர்களாக இருக்க மாட்டார்கள். அடுத்தவர்கள் தவறு செய்யப் போவதற்கு முன்பாக அதைத் தடுத்துச் சரி செய்யுங்கள். எல்லோருமே உங்களைக் கொண்டாடுவார்கள்.

● எல்லா இடங்களிலும் சில அடாவடிப் பேர்வழிகள் இருக்கவே செய்வார்கள். அவர்களுடன் இணக்கமாகப் போவது கடினம். அடிக்கடி அவர்களுடன் மோதினால், மன நிம்மதி காணாமல் போய்விடும். ஒதுங்கிப் போவது உத்தமம். 'இப்படி ஒருவராக நாம் மாறிவிடக் கூடாது' என்பதே, அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

● 'என் வேலையை நான் ஒழுங்கா செய்யறேன்' என்று தங்கள் வட்டத்தைச் சுருக்கிக்கொள்பவர்கள் முன்னுக்கு வர நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். எல்லோருடனும் உரையாடுங்கள். அவர்களைப் புரிந்துகொள்ளுங்கள். அடுத்தவர்களின் வேலைகளைக் கவனியுங்கள். நிறைய கற்றுக்கொள்ளுங்கள். எந்த இடத்திலும் தவிர்க்க முடியாதவராக நீங்கள் மாறுவீர்கள்.

● யாரும் ஏதாவது சொல்லும்போது குறுக்கிடாதீர்கள். அவர்கள் சொல்ல வருவதை முழுமையாகச் சொல்ல விடுங்கள். அதன்பின் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். உங்களிடம் யாராவது யோசனை கேட்கும்போது, அக்கறையுடன் வழிகாட்டுங்கள். நீங்கள் சொன்னதைத்தான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தாதீர்கள்.

● புதிதாக ஏதோ ஒன்றைச் செய்கிறீர்கள். அல்லது புதிய திட்டத்தைச் சொல்கிறீர்கள். அதன் சாதக, பாதகங்கள் எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லிவிடுங்கள். எதையும் மிகைப்படுத்திச் சொன்னால், பிறகு நீங்கள்தான் சிக்கலில் மாட்டிக்கொள்வீர்கள்.

● சில விஷயங்கள் உங்களைக் கோபப்படுத்தும். சில மனிதர்கள் உங்களை எரிச்சலில் ஆழ்த்துவார்கள். சில வேலைகள் உங்களைச் சோகத்தில் தள்ளும். இப்படி எது உங்களுக்குள் எதிர்மறை உணர்வுகளை ஏற்படுத்துகிறது என்பதைக் கவனியுங்கள். அதிலிருந்து ஒதுங்கி இருங்கள். அல்லது நேர்மறை அனுபவம் தரும் சூழலாக அதை மாற்றப் பாருங்கள்.

● உங்களைப் பற்றி அக்கறையான மனிதர்கள் சொல்லும் ஆக்கப்பூர்வமாக விமர்சனங்களைக் கேளுங்கள். அவை உங்களை மாற்றும் வழிகாட்டல்கள். நதி தன் போக்கில் நிலங்களை வளமாக்குவது போல, அன்பான மனிதர்கள் உங்களைச் செதுக்குவார்கள். அதையெல்லாம் கேட்டு மாற்றங்களைச் செய்துகொள்ளுங்கள். ●

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 6

டிசம்பர் 2025

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

இதழாசிரியர்

வள்ளி

வடிவமைப்பு

K. உதயா

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

எண். 188, தரை தளம்,

14வது குறுக்குத் தெரு சந்திப்பு,

டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,

சென்னை - 600 032.

கைப்பேசி: 9952920801

email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

அலட்சியம் தாண்டி அன்பு காட்டுங்கள்!

ஒரு தனியார் நிறுவனத்தில் அதிகாரியாகப் பணிபுரிபவர் கவிதா. அக்கறையாக வேலை பார்ப்பவர், கடுமையான உழைப்பாளி. தன் திறமையை நிரூபித்து, அதனால் பதவி உயர்வு பெறுகிறார். இதைக் கணவரிடம் போனில் சொல்வதைவிட, நேரில் சொல்லி அந்த மகிழ்ச்சியான தருணத்தைக் கணவருடன் இணைந்து கொண்டாட வேண்டும் என்ற ஆசையுடன் வீட்டுக்கு வருகிறார். வேலை முடிந்து ஏற்கனவே வந்துவிட்ட கணவர், வீட்டில் ஓய்வாக அமர்ந்து டி.வி-யில் கிரிக்கெட் போட்டியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். கவிதா உற்சாகமாகத் தனக்குக் கிடைத்த பதவி உயர்வு பற்றிச் சொல்ல, “அப்படியா... வெரிகுட்... கங்கிராட்ஸ்” என்று கூறிவிட்டுக் கணவர் தொடர்ந்து கிரிக்கெட் போட்டியைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்.

கவிதாவுக்கு எல்லா உற்சாகமும் வடிந்துவிட்டது. இதுபோன்ற அனுபவங்கள் அவருக்குப் புதிதில்லை. பல தருணங்களில் கணவரின் ரீயாக்ஷன் இந்த அளவுக்குத்தான் இருந்திருக்கிறது. ஏதாவது தவறாகப் பேசிவிட்டோமோ, அதனால் கோபமாக இருக்கிறாரோ என்று போய்க் கேட்டால் கூட, “அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் நல்லாத்தானே இருக்கிறேன்” என்று அமைதியாகச் சொல்லி முடித்துவிடுவார். அதற்கு மேல் விவாதம் செய்யவும் முடியாது.

இப்படிப்பட்ட அமைதி, குடும்ப உறவையே பாதிக்கக்கூடும். பெரும்பாலான குடும்பங்களில் திருமணமான சில ஆண்டுகளில் பிரச்னை வருவதற்கு, இதுபோன்ற அமைதியே காரணமாகிறது. பேச வேண்டிய நேரங்களில் அமைதி காப்பதும், அமைதியாக இருக்க வேண்டிய நேரங்களில் அதிகம் பேசுவதும் உறவைக் கெடுக்கிறது. பல பெண்களின் பெருங்குறையே, தன் கணவர் தன் நண்பர்களிடமும், உடன் பணிபுரிபவர்களிடமும் பேசுவது போலத் தன்னிடம் இயல்பாகப் பேசுவதில்லை என்பதுதான். திருமணம் ஆன ஆரம்பக் காலத்தில் மனைவியை வசீகரிப்பதற்கும், தன்னை நிரூபிப்பதற்காகவும் அதிகம் பேசுகின்ற ஆண்கள், வெகு சீக்கிரத்திலேயே மௌனமாகி விடுகின்றனர். தேவையான நேரங்களில் கூடப் பேச விரும்புவதில்லை. ஆனால், பெண்கள் இதில் தலைகீழாக இருக்கின்றனர். கணவரைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளும் வரை அதிகம் பேசாத பெண்கள், அதன்பின் அதீத உரிமை எடுத்துக் கொண்டு பேச ஆரம்பித்து விடுகின்றனர்.

பல பெண்களின் ஆதங்கம், கணவர் தன் உணர்வுகளை வெளிக்காட்டுவதில்லை என்பதுதான். ஆண்கள் தங்களின் சோகத்தையும், பிரச்னைகளையும் மனைவியுடன் பகிர்ந்துகொள்வதில்லை. இது பெரும்பாலான ஆண்களின் இயல்புதான். பெண்களைப் போன்று ஆண்கள் வெளிப்படையான எண்ணங்கள்

கொண்டவர்களாக இருப்பதில்லை. தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது ஆண் தன்மைக்குப் பொருத்தமற்ற, தேவையற்ற செயலாகக் கருதப்படுகிறது. இதனாலேயே பல ஆண்கள் தங்கள் பிரச்னைகளை வெளியில் சொல்வதில்லை. அதனால் அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்பை இழந்துவிடுகின்றனர்.

ஆண்களுக்குக் குடும்பப் பொறுப்பு, குழந்தைகள் எதிர்காலம் போன்ற விஷயங்கள் மட்டுமே மனைவியுடன் பேச வேண்டியவை என நினைப்பு இருக்கிறது. தன்னுடைய நிதி நிலை மற்றும் பிரச்னைகள் குறித்துத் தேவையில்லாமல் மனைவியிடம் புலம்புவதில் அவசியம் இல்லை என்று கருதுகின்றனர். இப்படி வெளிப்படையாகப் பேசாததால், கணவர் தன்னைப் புறக்கணிப்பதாக மனைவி நினைக்கிறார்.

பெரும்பாலான மனைவிகளின் பெரும் குறையே இதுதான். "நாள் முழுக்கத் தனியாக இருக்கிறோம். கணவர் வேலையிலிருந்து திரும்பியவுடன் நம்மிடம்

அனுசரணையாக நாலு வார்த்தை பேசவில்லையே. வந்ததும் 'களைப்பாக இருக்கிறது' என்று ஒதுங்கிப்போகிறாரே" எனப் புலம்புகிறார்கள். கணவனின் ஆதரவான அந்தப் பேச்சுதான் மனைவிக்கு அக்கறையையும், நெருக்கத்தையும் உணர்த்துவதாக உள்ளது. நாள் முழுக்க வேலை தொடர்பாக பேசிப் பேசி அலுத்துப் போய் வீடு திரும்பும் ஆண்கள், அமைதியாக இருக்கவே விரும்புகின்றனர். இதுதான் இருவருக்குமான முரண்பாடு. ஆனால், இதே கணவர் தன் நண்பர் வந்தாலோ, போன் அழைப்பு வந்தாலோ உற்சாகத்துடன் பேசுவதைப் பார்த்து மனைவி டென்ஷன் ஆகிறார்.

கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து, கணவரும் மனைவியும் ஆனந்தமாக வாழ வழிகள் உண்டு.

● **சரியான நேரத்தைத் தேர்ந்தெடுங்கள்:** எதை எப்படிப் பேசித் தீர்வு காண்பது என்பதை நேரம்தான் தீர்மானிக்கிறது. ஏதாவது முக்கியமான விஷயம் பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டுமா? இணக்கமான நேரத்துக்காகக் காத்திருங்கள் மனைவியரே! கணவர்களும், 'இதையெல்லாம் மனைவியிடம் பேச வேண்டுமா' என நினைக்காமல் எல்லா விஷயங்களையும் பகிர்ந்துகொள்ளுங்கள். வாழ்க்கைத்துணைக்குத் தெரியாத விஷயம் என எதுவும் இருக்கக்கூடாது.

● **அவகாசம் கொடுங்கள்:** பல நேரங்களில் கணவர் முக்கியமான தன்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனம் சாதிப்பதைக் கண்டு திரும்பத் திரும்ப அதையே கேட்டு நச்சரிப்பார்கள் சிலர். இதனால் மேலும் இறுக்கமும் எரிச்சலும் அதிகமாகும். இதுபோன்ற சூழ்நிலைகளைப் பக்குவமாகக் கையாள வேண்டும். 'இதற்கான பதில் எனக்கு வேண்டும். உங்களுக்கு எப்போது தோன்றுகிறதோ, அப்போது சொல்லுங்கள்' என்று அமைதியாக நகர்ந்துவிடுங்கள். கணவர் குற்ற உணர்வுக்கு ஆளாகி, விரைவில் தன் மௌனத்தைக் கலைப்பார்.

● **வேறு இடம் தேடுங்கள்:** தினம் தினம் எல்லோரும் கூடியிருக்கும் அதே வீட்டில் புதுப்புது விஷயங்களைப் பேசத் தோணாது. பொதுவாகக் குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் பெற்றோர், அதுதவிர மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு அதிக நேரம் செலவிடுவதில்லை. நேரம் இருக்கும்போது வாழ்க்கைத்துணையுடன் வெளியில் செல்லுங்கள். சின்ன பிக்னிக், சுற்றுலாப் பயணங்கள் என்பன போன்ற குடும்பத்துடன் சேர்ந்து செலவிடும் சூழ்நிலைகளில் பல விஷயங்களைப் பேச முடியும்.

● **அக்கறையும் ஈடுபாடும் காட்டுங்கள்:** அனைத்தையும்விட மிக முக்கியமானது, வாழ்க்கைத்துணை பேசும்போது அக்கறை காட்டுவது. மனதை அலைபாய விடாமல், வாதம் செய்யாமல், அக்கறையுடன் கேளுங்கள். ஈடுபாடு காட்டி ஆலோசனை சொல்லுங்கள்.

● **புகார் வேண்டாம்:** பொதுவாகப் பெண்கள் எப்போதும் புகார் கூறுபவர்களாகவே இருப்பதால் சண்டை வரும் வாய்ப்பு ஏற்படுவதாகக் கூறுகின்றனர். இதனாலேயே பல ஆண்கள் உரையாடலைத் தவிர்க்க முயற்சி செய்கிறார்கள். ஆக்கப்பூர்வமான, நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய வாதத்தைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பழைய தவறுகளையே குத்திக் காட்டுவதையும், "நீங்க எப்ப பார்த்தாலும் இப்படித்தான்" என்பது போலப் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். பழைய தவறுகளை வைத்து வாழ்க்கைத்துணையை மதிப்பிடக் கூடாது. தன் எண்ணத்தைப் பொறுமையாக, இனிமையாக எடுத்துரைத்து, அந்தச் சூழ்நிலையைச் சகஜமாக மாற்ற வேண்டும். இதற்கு மிகுந்த சுயகட்டுப்பாடு அவசியம். இது இருவரிடமும் இருந்தால், எப்போதும் இன்பம்தான். ●

முதிர்ச்சி எப்போது வரும்?

இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே மாதிரி பார்க்கும் பக்குவமான மனம் இருந்தால், அதைத்தான் 'முதிர்ச்சி' என்கிறோம். அந்த மனம் வந்துவிட்டால், உறவுகள் மேம்படும். சிலருக்கு அது 20 வயதில்கூட வந்துவிடும்; சிலருக்கு 80 வயது வரை முதிர்ச்சி வராமலே போகலாம். தான் முதிர்ச்சி அடைந்திருப்பதை ஒருவர் எப்படி உணர முடியும்?

- யாரைப் பற்றியாவது யாரோ வம்பு பேசுவதைக் கேட்க அலுப்பாக இருக்கும். 'இப்படி முதுகுக்குப் பின்னால் பேசுவது தவறு' என்று உணர்வார்கள். 'இதில் ஏன் நேரத்தை வீணடிக்க வேண்டும்' என்று நினைப்பார்கள். அப்படிப்பட்ட மனிதர்களிடமிருந்து விலகுவார்கள்.
- அம்மாவோ, மனைவியோ, நெருங்கிய உறவுகளோ, பால்ய நண்பரோ போன் செய்யும்போது எரிச்சல் வராது. போனை எடுத்து அன்புடன் பேச முடியும். அவர்களின் நலனை அக்கறையுடன் விசாரிப்பார்கள்.
- தான் பேசுவதைக் குறைத்து, அடுத்தவர்கள் பேசுவதைக் கேட்பார்கள். அவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க முயல்வார்கள். அவர்களின் பிரச்னைகளைக் கேட்டுத் தீர்வு சொல்வார்கள்.
- எல்லாம் தெரிந்தது போலப் பேச மாட்டார்கள். 'ஆமாம், இது எனக்குத் தெரியாது' எனத் தயங்காமல் ஒப்புக்கொள்வார்கள்.
- நண்பர்களை எதற்காகவும் விட்டுக்கொடுக்காமல் பேசுவார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவர்களைக் கொண்டாடவும் செய்வார்கள்.
- பிரச்னைகளைக் கண்டு ஒதுங்காமல், ஏதேதோ காரணங்கள் சொல்லித் தட்டிக் கழிக்காமல், நேரடியாக எதிர்கொள்வார்கள்.
- தங்கள் நேரத்தை வீணடிக்கும் மனிதர்களிடமிருந்து சாமர்த்தியமாக ஒதுங்கிக்கொள்ளக் கற்றிருப்பார்கள்.
- தன்னுடைய மகிழ்ச்சி மற்றவர்கள் கையில் இல்லை என்பதை உணர்ந்து, அதை யாரிடமும் தேடமாட்டார்கள். அது தன் மனதில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்திருப்பார்கள். அந்த மகிழ்ச்சியை நிரந்தரமாக்க வழிகளைத் தேடுவார்கள்.
- அடுத்தவர்களை நேசிப்பது போலத் தங்களையும் நேசிப்பார்கள். தங்கள் மனநிலையையும் உடல்நிலையையும் தோற்றத்தையும் அக்கறையுடன் மேம்படுத்துவார்கள். ஒன்றுமில்லாத விஷயங்களுக்காகத் தங்களை வருத்திக்கொள்ள மாட்டார்கள்.
- தேவையற்ற வாக்குவாதங்களையும் சண்டைகளையும் புறக்கணித்துவிட்டு, மௌனமாக அந்தச் சூழலைக் கடந்து போய்விடுவார்கள்.
- யாரையும் வெறுமனே தோற்றத்தை வைத்தும் பேச்சை வைத்தும் எடை போட மாட்டார்கள். ஏற்றத்தாழ்வு பார்க்காமல் எல்லோரையும் சமமாக மதித்துக் கண்ணியத்துடன் நடத்துவார்கள்.
- யார் மீதும் தங்கள் கருத்தை வலிந்து திணிக்க மாட்டார்கள். மாற்றுக்கருத்து வைத்திருக்க அடுத்தவர்களுக்கு உரிமை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வார்கள்.
- அடுத்தவர்களின் தவறுகளை மறக்கவும், அதைவிட அதிகமாக மன்னிக்கவும் கற்றிருப்பார்கள். ●


RAMRAJ
SHIRTINGS & SUITINGS
COTTON • LINEN • TRADITIONAL
Pride in Every Thread, Heritage in Every Weave.
100% Premium Fabrics
SCAN QR CODE FOR STORE LOCATION
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
LITTLE STARS
KIDS DHOTIS • SHIRTS
SCAN QR CODE FOR
STORE LOCATION
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
ACHARYA®
PANCHAKACHAM DHOTIS
தெய்வீக
அம்சங்கள் நிறைந்த
ராம்ராஜ் வேட்டிகள்
SCAN QR CODE FOR
STORE LOCATION
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
mithu®
TOWELS
Softness in Every Shape, Shade & Weave.
• Bamboo Towels
• Terry Towels
• Signature Towels
• Striped & Chequered Towels
Premium Cotton & Bamboo
High absorption
Quick drying
Non-allergic to skin
Light Weight
Range of colours & patterns
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

வெண்மை

சந்தாதாரர் ஆகுங்கள்!

'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஓர் ஆண்டு சந்தா ரூ.200

இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். VENMAII என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

வங்கிக் கணக்கு விவரம்: Venmaii
A/C No: 1809135000000299
Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch
IFSC Code: KVBL0001809.

மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா:	2 வருட சந்தா:
ரூ.~~200~~ ரூ.125 மட்டும்.	ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா:	2 வருட சந்தா:
ரூ.~~200~~ ரூ.125 மட்டும்.	ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்

‘நமக்கு நண்பர்கள் போதும், பொறாமையும் வெறுப்பும் காட்டும் உறவுகள் வேண்டாம்’ என்ற மனநிலை பல நகரத்துக் குடும்பங்களில் ஊறிக் கிடக்கிறது. நண்பர்கள் முக்கியம்தான், அவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது. அதற்காக உறவுகளைத் தூக்கி எறிவது தவறு.

சார்ந்து வாழ்வதே மனிதகுலத்தின் இயல்பு. தலைமுறை தலைமுறையாக உறவுகளைச் சார்ந்தே மனிதர்கள் வாழ்கிறார்கள். நண்பர்கள் எல்லாம் பிற்காலத்தில் நாம் உருவாக்கிக்கொள்வது. ஆனால், பிறக்கும்போதே நமக்கு உறவுகள் அமைந்துவிடுகிறார்கள். கருவில் சுமந்த அம்மா, கரம் பிடித்து உலக நடைமுறைகளைக் கற்றுக்கொடுத்த அப்பா, உடன்பிறந்தவர்கள், இரண்டு தரப்பிலும் இருக்கும் குடும்பத்தினர் என்று எத்தனை எத்தனை உறவுகள் நமக்கு அறிமுகமாகின்றன! இவர்களுடன் வாழ்வதில்தான் நமக்கு மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கிறது. பழக்கமில்லாத பிரதேசங்களுக்குக் குடிபோகும் பலரும் அதிகம் இழப்பது இந்த உறவுகளின் நெருக்கத்தையே!

உறவினர்களிடமிருந்து ஒதுங்கி வாழும் சிலருக்கு, தங்கள் உறவினர்களைப் பற்றி நிறைய புகார்கள் இருக்கின்றன. அவர்கள் தங்களுக்குள் சில கேள்விகளைக் கேட்டுக்கொள்வது அவசியம். நாம் நன்றாக வாழும்போது எத்தனை பேருடன் சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டோம்? உறவினர்கள் சிலர் பிரச்னையில் இருந்தபோது ஓடிச் சென்று உதவினோமா? உறவினர்கள் விசேஷங்களுக்கு அழைக்கும்போது, ஏதேதோ காரணம் சொல்லித் தட்டிக் கழிக்காமல் போய் கௌரவித்திருக்கிறோமா? எத்தனை பேருக்கு அவர்களின் வெற்றிகளின்போது மனம்திறந்து பாராட்டுகளை அளித்திருக்கிறோம்? அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, நெருக்கடிகளில் ஆலோசனை சொல்லித் தோள் கொடுத்திருக்கிறோம்?

இதற்கெல்லாம் நேர்மையான பதில் வைத்திருக்கும் யாரும், உறவுகள் மீது அவநம்பிக்கை கொள்ள மாட்டார்கள். ‘எதுக்கு உறவு? பொறாமை, பகை, வம்பு பேசுறதுன்னு, ரொம்ப வெறுத்துட்டேன்!’ என்ற அனுபவம் சிலருக்கு இருக்கலாம். உறவுகள் அனைத்துமே அப்படி அல்ல, அது தனிமனித குணத்தின் வெளிப்பாடு. அதற்காக ஒட்டுமொத்த உறவுகளும் வேண்டாம் என்று விலக்கத் தேவையில்லை. எல்லா உறவுகளும் இனிமையானவர்கள் இல்லை, அதே சமயத்தில் எல்லா உறவினர்களும் மோசமானவர்களும் இல்லை. நாம் நல்லமுறையில் உறவைப் பராமரித்தால், நம்மைத் தாங்க ஏதோ உறவுகள் நிச்சயம் வரும்.

நெருக்கமாக உறவுகளைப் போற்றுபவர்கள் நடத்தும் விசேஷங்களுக்குப் போய்ப் பார்த்தால், பல நெகிழ்ச்சியான தரிசனங்கள் கிடைக்கும். 100 வயதுத் தாத்தா தன் கொள்ளுப் பேரனிடம் ரைம்ஸ் கேட்டுப் பொக்கை வாயால் சிரித்துக்கொண்டிருப்பார். அங்கேயே திடீரென அறிமுகமான வாண்டுகள் இணைந்து விளையாடிக் கொண்டிருக்கும். தன் மகனுக்குப் பொருத்தமான பெண் யாராவது கூட்டத்தில் தென்படுகிறார்களா என்று நடுத்தர வயது அம்மா தேடிக்கொண்டிருப்பார். புடவை கட்டிப் பழக்கமில்லாத ஒரு டீன் ஏஜ் பெண்ணுக்கு யாரோ ஒரு அத்தை வந்து புடவை கட்டிவிடுவார். பந்தி விசாரிப்பது முதல் தாம்பூலம் கொடுப்பது வரை எல்லா வேலைகளையும் நிறைய உறவுக்காரர்கள் தாமாக முன்வந்து செய்துகொண்டிருப்பார்கள். உறவினர்கள்

சிலரை இணைத்து இணைத்துப் புதிதாக வாட்ஸ்அப் குழுக்கள் உருவாகிக்கொண்டிருக்கும்.

“நீ எஞ்சினியரிங் முடிச்சிருக்கேன்னு ஏன் எங்கிட்ட சொல்லலை? நான் ஒரு ஐ.டி கம்பெனியில ஹெச்.ஆர் டிபார்ட்மென்ட்ல இருக்கேன். உன் ரெஸ்யூமை எனக்கு ஃபார்வேர்டு பண்ணு. நல்ல வாய்ப்பு இருக்கும்போது கண்டிப்பா சொல்றேன்” என்று தூரத்து உறவினர் ஒருவர் அக்கறையுடன் சொல்வதை அங்கு கேட்கலாம்.

“மாசமா இருக்கியாம்மா? இது எத்தனையாவது மாசம்? ‘நாம தாயில்லாப் பொண்ணாச்சே’னு எல்லாம் கவலைப்படாதே. உன் பிரசவத்துக்கு அத்தை நான் உதவிக்கு வருவேன். வலி எடுத்து ஆஸ்பத்திரிக்குக் கிளம்பும்போது எனக்கு ஒரு போன் பண்ணிடு. அப்படியே நிமிஷத்துல ஓடிவந்து பக்கத்துல இருப்பேன்” என்று அன்பு பொழியும் உரையாடல்களை அங்கு ரசிக்கலாம்.

உறவுச் சங்கிலி எத்தனை வலிமையானது என்பதை இதுபோன்ற தருணங்களில் உணரலாம். எல்லோருக்கும் வேலைகள் இருக்கும், பொறுப்புகள் இருக்கும், திடீர்ப் பயணங்களில் சங்கடங்கள் இருக்கும், பிள்ளைகளின் படிப்புதான் எல்லாவற்றையும்விட முக்கியம் என்று காரணங்கள் ஏராளம் இருக்கும். ஆனால், அதையெல்லாம் காரணம் காட்டி உறவுகளையும் அவர்களின் விசேஷங்களையும் தவிர்ப்பது நல்லதல்ல. இயன்றவரை போய்விட வேண்டும்.

முடியாத சூழலில், ‘‘கல்யாணம் நல்லபடியா முடிஞ்சதா? மன்னிக்கணும், என்னால வர முடியலை” என்று போனில் விசாரித்துவிட்டு, அடுத்த முறை ஊருக்குச் செல்லும்போது அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டும். “அப்பா அந்தக் காலத்துல எல்லாச் சொந்தங்களையும் விடாமப் பிடிச்சு வச்சிருந்தாரு. நமக்கு ஏன் அத்தனை சொந்தங்கள்?” என்ற கேள்வி அடுத்த தலைமுறைக்கு எழக்கூடாது. சமூக வலைதளங்களில் எங்கோ இத்தாலியிலும் கனடாவிலும் அமெரிக்காவிலும் வசிக்கும் அறிமுகமே இல்லாத மனிதர்களிடம் நட்பாகி, அவர்களின் பிறந்த நாளுக்கு மறக்காமல் வாழ்த்துச் சொல்லும் எத்தனை பேர், தங்களுக்கு நன்கு தெரிந்த உறவினர்களிடம் அதே மாதிரி நடந்துகொள்கிறார்கள்? வேர்களை அறுத்துக்கொண்டு, கிளைகளை விரிக்கத் துடிக்கிற இந்த மனநிலை சரியில்லை.

கல்யாணத்தில், கிரகப் பிரவேசத்தில், சடங்கில், ஊர்த் திருவிழாவில் உறவுகள் அனைவரும் ஓரிடத்தில் கூடிப் பேசி, சிரித்து, கதைகளைப் பகிர்ந்து, விருந்து சாப்பிட்டு, பிரியவே மனமில்லாமல் கலைந்து சென்ற நம் முந்தைய தலைமுறையினரின் சந்தோஷம் இந்தத் தலைமுறைக்குக் கிடைக்கவில்லை. அதனால்தான் அவர்கள் சமூக வலைதளங்களில் அந்தக் கொண்டாட்டத்தையும் உற்சாகத்தையும் தேடுகிறார்கள்.

“அடிக்கடி பார்த்துக்க முடியல... எங்க இருந்தாலும் நல்லா இருக்கணும்” என்று உளமார வாழ்த்தும் தூரத்து உறவான பாட்டியின் ஆசீர்வாதம், உலகின் மிகத் தூய்மையான அன்பு. “நல்லது கெட்டதுன்னா கூப்பிடுடா... ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்தாசையா இருக்கணும்’’ என்று உரிமையுடன் சொல்லும் சித்தப்பாவின் பிரியம், ஆகச்சிறந்த வரம்.

உறவுகள் தொடர்கதை. உறவுகளை அடுத்த தலைமுறைக்குப் பரிசளியுங்கள். உறவினர்கள் இல்ல விழாக்கள், விசேஷங்கள், ஊர்த் திருவிழாவுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். உறவினர்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். அவர்களுடனான உங்களின் பால்ய வயது நினைவுகளைப் பிள்ளைகளுடன் பகிருங்கள். அவர்கள் உங்கள் வாழ்வில் முக்கியமானவர்கள் என்பதைக் குழந்தைகளுக்கு உணர்த்துங்கள். உறவுகளின் அருமை உணர்ந்து அவர்கள் வளர்வார்கள்.

உறவுகள் குறித்த பெரிய எதிர்பார்ப்புகள் எதையும் பிள்ளைகளிடம் ஏற்படுத்திவிடாதீர்கள். நாம் அவர்களிடம் எதிர்பார்ப்பது போல, அவர்களும் நம்மிடம் எதிர்பார்ப்பதில் தவறில்லை என்ற பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கை சுவைக்க எதிர்பார்ப்புகள் வேண்டும்தான். ஆனால், அவை வாழ்க்கையின் சுவையைக் கெடுத்துவிடாதபடி அளவாகவும், நியாயமாகவும், சுயநலமில்லாமலும் இருந்தால் நலம். எதிர்பார்ப்புகள் இல்லையென்றால் ஏமாற்றம் இல்லை. மனகசப்புகளும் உறவு விரிசல்களும்கூட இல்லை. எதிர்பார்ப்புகள் எதுவுமின்றி பழகுவோம். உறவுகளைக் கொண்டாடுவோம். ●

இதோ புத்தாண்டு நெருங்கிவிட்டது. வீடு, உறவு வட்டம், அலுவலகம், தொழில் செய்யும் இடம், சுற்றம் என எங்கும் மனிதர்களைக் கையாள்வதில்தான் ஒருவரின் வெற்றி அடங்கியிருக்கிறது. புத்தாண்டில் புது உறவுகள் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

- சந்திக்கும் எல்லா மனிதர்களிடமும் கருணையும் மரியாதையும் காட்டுங்கள்.
- எல்லா மனிதர்களையும் அவர்களின் நிறை, குறைகளுடன் ஏற்றுக்கொள்ளுங்கள்.
- தினம் தினம் மற்றவர்களுக்காகச் சின்னச்சின்ன உதவிகளைச் செய்யுங்கள்.
- வாழ்வில் முக்கியமாகக் கருதும் மனிதர்களுடன் எப்போதும் தொடர்பில் இருங்கள்.
- எப்போதும் எதிர்மறையாகப் பேசும் மனிதர்களிடமிருந்து விலகி இருங்கள்.
- எப்போதோ விலகிப் போனவர்களை நினைத்து வருந்தாதீர்கள். அவர்களை மறந்துவிடுங்கள்.
- ஆரோக்கியமாக இல்லாத, மனதைப் புண்படுத்துகிற விமர்சனங்களைப் பொருட்படுத்தாதீர்கள்.
- உண்மையாகப் பழகும் நண்பர்கள், உறவுகளின் கருத்தைக் காதுகொடுத்துக் கேளுங்கள்.
- உறுதிமொழி கொடுத்தால், அதைக் காப்பாற்றுங்கள். நேசிப்பவர்களிடம் எப்போதும் உண்மை பேசுங்கள்.
- விவாதங்களில் ஜெயிக்க ஆசைப்படாதீர்கள். மனிதர்களின் மனதை ஜெயிக்க ஆசைப்படுங்கள்.
- நீங்கள் எப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்க வேண்டும் என ஆசைப்படுகிறீர்களோ, அப்படிப்பட்ட வார்த்தைகளையே பேசுங்கள்.
- உங்கள் கருத்துகளையோ, முடிவுகளையோ மற்றவர்கள் மீது திணிக்காதீர்கள். அவர்களைச் சுயமாகச் செயல்பட விடுங்கள்.
- சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது. என்ன பேசுகிறீர்களோ, அப்படியே செயலிலும் காட்டுங்கள்.
- எல்லோரையும் ஊக்கப்படுத்துங்கள், உற்சாகப்படுத்துங்கள். உங்களைக் கொண்டாடும் நண்பர்களும் உறவுகளும் கிடைப்பார்கள்.
- தவறு செய்பவர்களை மன்னித்துவிடுங்கள், அவர்கள் செய்ததை மறந்துவிடுங்கள். பெருந்தன்மை காட்டுவதே, உறவை உறுதியாக்கும்.
- கொஞ்சமாகப் பேசுங்கள், அடுத்தவர் பேசுவதைக் காதுகொடுத்துக் கேளுங்கள். உங்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ●

ENES
TEXTILE MILLS
Ramraj-V-Tower, 10, Sengunthapuram,
Mangalam Road, Tirupur - 641 604.
Ph : 0421 - 4304147,
web : www.ramrajcotton.in

வஸ்திரதானம் சிறந்தது

அன்புடன்

வாழ்க வளமுடன்.

தானங்களில் அன்னதானம், கோதானம், பூமிதானம் என பலவகையான தானங்கள் இருந்தாலும், ஒரு மனிதனின் உயிரை விட பெரிதென போற்றக்கூடிய மானத்தை காக்கும் ஆடைகளை தானமாக (வஸ்திர தானம்) வழங்குவது சிறப்பானதாக கருதப்படுகிறது.

நமது வேதங்களில் வஸ்திர தானத்தை குறித்து மிகச் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. தேவதைகள் அனைவரும் வஸ்திரத்தில் குடியிருப்பார்கள். கரை உள்ள வஸ்திரத்தை தானமாக அளித்தால்..., ***தானம் வழங்குபவர்களும் அவரது தலைமுறைகளும் நீடூழி வாழ வேண்டும் என வஸ்தீரத்தில் குடியிருக்கும் தேவதைகளே வாழ்த்துவதற்கு சமம். அதுபோல தானம் பெறுபவர்களும், தருபவர்களை வாழ்த்தும்போது, வாழ்த்துகள் பன்மடங்காக பெருகி, வஸ்தீர தானம் தருபவருக்கு நற்பலன்களை அளிக்கிறது.***

நெசவின் மூலமாகவும், நெசவாளிகள் மூலமாகவும் நாம் பல தத்துவங்களை தெரிந்து கொள்ள முடியும். ஆணிலும் பெண்மை உண்டு. பெண்ணிலும் ஆண்மை உண்டு. இதனை அறிவியலுக்கு முன்பாகவே ஆன்மீகம் அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தில் கூறியுள்ளது. வேட்டியோ புடவையோ அவை இரண்டுக்குமே குறுக்கு நெடுக்கில் குட்டையான குறுக்கிழையும் உண்டு (**ஊடை**), நீண்ட நெடுக்கிழையும் உண்டு (**பாவு**). ஆடையில் ஓடும் நீண்ட நூலிழை பெண், அதில் குறுக்கே ஓடும் குட்டை நூலிழை ஆண், உலகியல் வாழ்வில் பெண்களே அதிக பங்கு வகிப்பவர்கள் என்பதை இது காட்டுகிறது. அதனால்தான் இல்லற வாழ்வில் அனைத்து செயல்களிலும் பெண்களுக்கே முன்னுரிமை தருகிறார்கள். Ladies first என்ற ஆங்கில தத்துவமும் இதற்குப் பின்னால் தோன்றியதுதான்.

ஆணையும் பெண்ணையும் சேர்த்து நெசவு நெய்ததுதான் இல்லற வாழ்க்கை என்பதே உண்மை. இந்த தத்துவத்தை கூறுவது தான் வேஷ்டி மற்றும் புடவை முதலான ஆடைகள். அதனால்தான் விழாக்களில் மற்றும் சுப நிகழ்வுகளில் ஒருவருக்கொருவர் வேட்டி வைத்து தருவது மற்றும் புடவை வைத்து தருவது என்ற பாரம்பரிய பழக்கங்கள் தோன்றின.

உலகில் நெருக்கமாக பின்னிப் பிணைந்த முதல் இன்டர்நெட் வலைத்தள சேவையே இந்த புடவை மற்றும் வேட்டி தான். அதனால் தான் பூர்வ அபர கிரியைகள் எல்லாவற்றிலுமே இந்தத் துணி என்பதற்கு மாபெரும் முக்கியத்துவம் தரப்பட்டது. இத்தோடு தானங்களில் வஸ்திர தானம் சிறந்தது என்பதும் நிலை நிறுத்தப்பட்டது

வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கிறோம்.

இப்படிக்கு

ராம்ராஜ் குழுமம்.

LiTTLE STARS®
KIDS DHOTIS • SHIRTS
GENXT®
READYMADE POCKET DHOTIS
lagnaa®
PURE SILK DHOTIS | SHIRTS
LINEN PARK®
PURE LINEN SHIRTS & FABRICS
CULTURE CLUB®
MATCHING DHOTIS & SHIRTS

பெண் பிள்ளைகள் ஊருக்குக் கிளம்பும்போது, தங்கள் பெட்டிகளில் பெற்றோர்களின் தூக்கத்தையும் எடுத்துக்கொண்டு கிளம்பி விடுகிறார்கள்.

'அம்மா வீடு' என்ற சொல்லுக்கான பதம் 'அம்மா வீடு' என்பதல்ல, நம்மை ஆற்றுப்படுத்தும் இடம் என்பது மட்டுமே! வேறெந்த இடமும் போக்கற்றவர்களே பெரும்பாலும் அம்மா வீட்டில் சரணடைகின்றனர்.

நம் பேச்சை யார் வேண்டுமானாலும் புரிந்து கொள்ளலாம். ஆனால் நம் மௌனத்தைப் புரிந்துகொள்ள நேசிக்கும் உறவுகளால் மட்டுமே முடியும்.

நாம் யாரை முக்கியம் என்று நினைக்கிறோம் என்பதல்ல வாழ்க்கை. நம்மை யார் முக்கியமாக நினைக்கிறார்கள் என்பதே வாழ்க்கை!

அதிகமான அன்பை விட அதிகமான புரிதல்தான் எந்த உறவையும் நீண்ட காலம் வாழ வைக்கும்.

அப்பா என்பவர்
மீசை வைத்த
அம்மா!

தன் பேச்சிற்குக் காதுகளை இரவல் தருவதாலும், மறுப்பின்றித் தேவைகளுக்குத் தலையசைப்பதாலுமே குழந்தைகளுக்குத் தாத்தா, பாட்டிகளை அதிகம் பிடிக்கிறது!

சாய்ந்துகொள்ள தோள் இருக்கும்போதே கண்ணீர் சுரப்பிகள் அதிகம் வேலைசெய்கின்றன!

கணவன் மனைவி ஒருவரை ஒருவர் ஆராய்ந்து கொண்டிருந்தால், நிம்மதி என்பது சுரங்கம் அமைத்து தெருவிற்குப் போய்விடும்.

எப்போது போனாலும் உங்களுக்காகத் திறந்திருக்கும் வாசல், கிடைக்கும் அன்பு... இரண்டையும் தொலைத்து விடாதீர்கள்.

தர்க்கம் செய்வதையும் கோபம் கொள்வதையும்விட மிகப்பெரிய யுக்தி, கொஞ்சம் விலகி நிற்பது.

சம்பந்தப்பட்ட இருவர் பேசினாலே முடிவுக்கு வரும் சண்டைகளைப் பற்றி வேறு யார் யாரிடமோ எல்லாம் பேசி, வருடம் கடந்தும் வளர்த்துக்கொள்வது உறவில் சரியல்ல!

உறவில் நெருக்கமானவர்களிடம் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை என்பதற்கு ஒரு காரணம்தான் இருக்க முடியும்... மன்னிப்புக் கேட்கும் முன்பே மன்னித்திருப்பர்!

போகிறேன் என்பவர்களுக்கு வழிவிடுங்கள். பேசவேண்டும் என்பவர்களுக்குக் காது கொடுங்கள். வேண்டாம் என்றாலும் தேடி வருபவர்களுக்குச் சோறிடுங்கள். கோபம் வரும்போது அனிச்சையாய் வாய் மூடுங்கள்.

வாழ்ந்து கெட்டவர்களைவிட, பேசியே கெட்டவர்கள் அதிகம். அதனால நாக்கைக் கட்டுப்படுத்தவும்.

'தண்ணீர் கீழ்நோக்கிப் பாயும்' என்றொரு சீனப்பழமொழி உண்டு. 'மனிதன் தன் பெற்றோரை விடப் பிள்ளைகளையே அதிகமாய் நேசிப்பான். ஒருபோதும் எதிர்த்திசையில் அன்பு பயணிக்காது' என்பதற்கானது அது. உண்மையில் நாம் நம் மீது அன்பு செலுத்துபவர்களை, நம்மை நாடி வருபவர்களை, நமக்கு முன்னுரிமை கொடுத்து அக்கறை காட்டுபவர்களைப் பல சமயம் நாம் கவனிப்பதே இல்லை.

சரியான தருணத்தில், சரியானவர்கள், சரியானவற்றுடன், சரியாக வந்து சேர்வார்கள்.

'நீ பேசலன்னா போ, நானும் பேச மாட்டேன்' என்று சொல்கிற உறவுகளுக்கு மத்தியில், 'நீ பேசலன்னா என்ன? நான் வந்து பேசுவேன்' என்று சொல்கிற உறவுகள் வரம் மட்டும் இல்லை, வாழ்தலுக்கான பலம்!

இவ்வாழ்வு நாம் வேண்டியதையெல்லாம் அடையச் செய்யும். ஆனால் அனைத்தையும் காலம்தவறிச் செய்யும். நேற்று கேட்டதை இன்று தரும், இன்று கேட்டதை நாளை எப்போதேனும் தரும், ஆனால் தரும்.

எல்லா மனிதர்களும் தேவைக்குத்தான் தங்களிடம் நெருங்குகிறார்கள் என்ற எண்ணத்தைப் போல் கருணையற்றதனம் வேறில்லை.

ஒருவர் வழிகாட்டுதலில் வளரும் பிள்ளைகள் அருமையாகவே வளர்கின்றன. அது அப்பாவா, அம்மாவா, பாட்டியா, தாத்தாவா என்பது இல்லை.

ஒரு காலத்தில் பாட்டிகள்
இருந்தார்கள்.
அவர்களின் இடுப்பில்
சுருக்குப் பை இருந்தது.
விபூதி பூத்த அந்தப் பைக்குள்
உலகத்து நோய்க்கெல்லாம்
மருந்து இருந்தது.

குடும்ப அமைப்புதான் மனிதனை மிருகமாவதிலிருந்து பாதுகாக்கிறது. குடும்ப அமைப்புதான் மனிதனைப் பறவையாவதிலிருந்தும் தடுக்கிறது.

நீங்கள் சொல்வது பொய் என்று தெரிந்தும், அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் உங்களுடனே இருப்பவர்களைவிடவா பிரியமான உறவுகள் வேறு உண்டு?

கூர்ந்து கவனித்தால் அனைத்துக் குடும்பங்களிலும் பிரச்னை ஒன்றாகவே இருக்கிறது.மனிதர்கள் அதைக்கையாளும் விதமும், பதில் வினையாற்றும் விதமும் தீர்வுகளை வெவ்வேறாக்குகின்றன.

வாசலில் செருப்புகளின் எண்ணிக்கை உயரும்போது வீட்டினுள் மகிழ்ச்சியின் அளவும் உயர்கிறது... உறவுகளை அரவணைப்போம்!

தூக்கி எறியவும் வேண்டாம்
சுமந்து திரியவும் வேண்டாம்
அது உறவோ, உணர்வோ!

அன்பு என்பது காரணம் அறியும் முன்பே, கண்ணீர் கன்னம் தாண்டிடாமல் துடைப்பது!

தோல்வியடைந்த மனிதர்களுக்குக் கொடுக்க நம்மிடம் வெற்றிகள் இல்லாமல் போகலாம். ஆனால், அவர்களின் காயங்களுக்கு மருந்துகள் வார்த்தை என்னும் வடிவில் நிறையவே உள்ளன.

பிறர் நம்மிடம் சண்டையிடும் பொழுது நாம் அமைதியாக இருந்தால் நாம் தவறு செய்தவர்கள் என்கின்ற அர்த்தம் இல்லை. வார்த்தைகள் விட்டால் உறவு பிரியும் என்று உணர்ந்தவர்கள்.

எதையுமே எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பதைவிட, எடுத்துக்காட்டாய் இருந்து புரிய வைப்பதே எளிது!

வாட்ஸ் அப் உரையாடலில் எவ்வளவு சீரியஸான விஷயமாக இருந்தாலும் ஒரு 'ஸ்மைலி' போட்டால் சுமுகமாக முடிந்துவிடும். அதுபோல அகத்திலும், முகத்திலும் நிரந்தரமாக 'ஸ்மைலி'யை வைத்திருங்கள். அனைத்துப் பிரச்னைகளுக்கும் அதுவே சுபமான முற்றுப்புள்ளி.

பெற்ற பிள்ளைகளுக்காக அடகு வைத்த இளமையை வட்டியுடன் மீட்டுத்தரும் தெய்வங்கள், பேரக்குழந்தைகள்!

சிலரைப் பிடிக்காது, ஆனாலும் விலக முடியாது. சிலரை ரொம்பப் பிடிக்கும், இருந்தாலும் நெருங்க முடியாது! இதுதான் வாழ்க்கை.

எவ்விதக் கூச்சமுமின்றி உரிமையாய் அப்பாவிடம் காசு கேட்டதைப் போல, அப்பா நம்மிடம் கூச்சமின்றிக் கேட்கும்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் போதும்.

வலியும் பசியும் யார் முகத்தை நம் மனக்கண்ணில் கொண்டு வருகிறதோ, அவரே நமது உயிரான உறவாகிறார். அவரை உங்கள் கைதொடும் தூரத்தில் வைத்திருப்பதே இவ்வாழ்வை இனிதாக்கும்.

இந்த உறவு என்றும் நிலைக்கும்!

ஒருவரின் தோற்றம், அந்தஸ்து, வசதி, பதவி, செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றைப் பார்த்து அவருடன் இன்னொருவர் ஏற்படுத்திக்கொள்ளும் உறவுக்கு எக்ஸ்பயரி தேதி உண்டு. அந்த அடையாளம் அவரிடம் இல்லாமல் போகும்போது அந்த உறவு முறிந்துவிடும். உறவின் பிணைப்பு உணர்வுப்பூர்வமாக நிகழ வேண்டும். அதைச் செய்வது எப்படி?

- உங்கள் மீது அக்கறை காட்டும் ஒருவரை எந்தத் தருணத்திலும் நிராகரித்துவிடாதீர்கள். எதற்கும் நேரம் இல்லாமல் மனிதர்கள் தங்கள் காலில் சக்கரம் கட்டியபடி ஓடிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், நேரம் ஒதுக்கி உங்களிடம் உரையாடும் எவரையும் புண்படுத்திவிடாதீர்கள். அந்த உறவை இறுகப் பற்றுங்கள்.

- உங்களுக்காக நேரம் செலவிட்டு எதையும் செய்யத் தயாராக இருக்கும் மனிதர்களுக்கு உங்கள் நேரத்தைக் கொடுங்கள். "ஷாப்பிங் போகலாமா? எனக்கு டிரஸ் செலக்ட் பண்ண வர முடியுமா?" என்பது போல அவர்கள் எதையாவது கேட்கும்போது, நேரம் ஒதுக்கி அவர்களுடன் இணைந்திருங்கள்.

- எப்போதும் எவரிடமும் பணிவாக இருங்கள். அலுவலகத்தில் உயர் அதிகாரியிடமோ, தொழில் செய்யும் இடத்தில் முதலாளியிடமோ மட்டும்தான் பணிவு காட்ட வேண்டும் என்பதில்லை. உறவுகள் அனைவரிடமும் அப்படி இருங்கள். பணிவு என்பது கனிவாக இருப்பது மட்டும் இல்லை... ஒருவருக்கு உதவி தேவைப்படும்போது அவர் அருகில் இருப்பது, பிரச்னைகளைச் சொல்லும்போது தோள் கொடுத்து ஆதரவளிப்பது, எவரையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பது என எல்லாம் இணைந்ததுதான்.

- நல்ல நண்பனாக இருங்கள். எல்லோருமே நேசத்துக்குரிய நண்பர்களை விரும்புகிறார்கள். இந்தக் காலத்தில் உண்மையான, அக்கறையான நண்பர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. அப்படிப்பட்ட நண்பர் உங்களுக்கு உறவாகக் கிடைத்தால், அவரை இழந்துவிடாதீர்கள். நீங்களும் மற்றவர்களுக்கு அப்படியான நண்பராக இருந்தால், எந்த உறவும் உங்களைப் புறக்கணிக்காது.

● அம்மா, அப்பா, வாழ்க்கைத்துணை, பிள்ளைகள், ஆசிரியர், நண்பர்கள், நெருங்கிய உறவுகள் என எவராக இருந்தாலும், அவர் பேசுவதைக் காதுகொடுத்துக் கேளுங்கள். அடுத்தவர் பேசுவதைக் கேட்காமல், அவர் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாது. அவரின் விருப்பங்கள், ரசனைகள், கருத்துகளை அறிய முடியாது. காதுகளையும் மனதையும் திறந்து வைத்து உறவாடுவோர், எவருக்கும் நெருங்கிய உறவாக மாற முடியும்.

● உதவி செய்யுங்கள். எவருக்கும் வாழ்க்கையில் நெருக்கடியான தருணங்கள் ஏற்படும். அதுபோன்ற தருணங்களில் அவர்களுடன் இருங்கள். பெற்றோரின் குழப்பங்களைப் போக்கி, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துங்கள். எவ்வளவு வேலைகள் இருந்தாலும், குழந்தைகளுடன் செலவிட நேரம் ஒதுக்குங்கள். நாம் செலவிடும் நேரமும், பேசும் வார்த்தைகளும்தான் உறவுகளை மேம்படுத்த உதவுகின்றன.

● முரண்பாடுகளை எப்படித் தீர்க்கிறீர்கள் என்பதும் முக்கியம். ஏதோ ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது என்றால், உங்கள் கருத்தைக் கனிவாகச் சொல்லிப் புரிய வையுங்கள். 'நான் சொல்வதே சரியானது' என வாதாடாதீர்கள். 'இந்தக் காரணத்தால் இதைச் சரி என்று நினைக்கிறேன்' என ஆதாரங்கள் அடிப்படையில் சொல்லுங்கள். அடுத்தவர் சொல்லும் கருத்தைக் காதுகொடுத்துக் கேளுங்கள். அது அபத்தமாகவோ, தவறாகவோ இருந்தாலும் அவரைப் புண்படுத்திவிடாதீர்கள். இப்படிச் செய்தால், முரண்பாடுகளுக்குப் பிறகு உங்கள் உறவு இன்னும் நெருக்கமாகும்.

● எந்தச் செயலிலும் உங்கள் மதிப்பை வெளிப்படுத்துங்கள். எப்படி உடை அணிகிறீர்கள், என்ன மாதிரியான விஷயங்களுக்குப் பணத்தைச் செலவிடுகிறீர்கள், எப்படிப்பட்ட நண்பர்களுடன் நேரம் செலவிடுகிறீர்கள், சொன்ன வார்த்தைகளை எப்படிக் காப்பாற்றுகிறீர்கள், நெருக்கடிகளை எப்படி எதிர்கொள்கிறீர்கள் என எல்லாமே உங்களை மதிப்பிற்குரிய ஒரு மனிதராகக் காட்ட வேண்டும். உங்களுடன் உறவாடும் எவரையும் இப்படிப்பட்ட மதிப்புகள் கொண்டவராக மாற்றுங்கள். அதன்பின் உங்களுக்குள் இணக்கம் அதிகரிக்கும்.

● எப்போதும் சோகமாக முகத்தை வைத்துக்கொண்டு, குழப்பமாகவே பேசிக்கொண்டு இருப்பவர்களை எவரும் நண்பராகவோ, உறவாகவோ ஏற்க மாட்டார்கள். உங்கள் பேச்சில் நகைச்சுவை வெளிப்பட வேண்டும். அது, அடுத்தவர்களைப் புண்படுத்தாத நகைச்சுவையாக இருக்க வேண்டும். வாழ்க்கைத்துணையுடன் இணைந்து நகைச்சுவையை வெளிப்படுத்த முடிந்தவர்கள் பாக்கியசாலிகள். பிள்ளைகளுடன் ஜாலியாக உரையாடத் தெரிந்தவர்கள், எவருக்கும் இனிமையான உறவாக மாறுவார்கள்.

● மனதை அழகாக வைத்திருங்கள். வெளித்தோற்றம் ஆரம்பத்தில் ஓர் ஈர்ப்பை உருவாக்கலாம். அதைத் தாண்டி ஓர் உறவை நகர்த்திச் செல்வது மனதின் அழகுதான். அன்பு, நம்பிக்கை, கருணை, மரியாதை, அக்கறை என நேர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தும் எவரும் உறவுகளால் நேசிக்கப்படுவார். இந்த உணர்வுகள் எதையும் நம் கண்களால் பார்க்க முடியாது. ஆனால், இதயத்தால் இவற்றை உணர முடியும்.

● ஓர் உணவுப்பொருளுக்கு எக்ஸ்பயரி தேதி இருக்கிறது. நீண்ட நாள் வைத்திருந்தால் அது கெட்டுப் போகும். வீட்டு உபயோகப்பொருட்களை நீண்ட நாள் பயன்படுத்தினால் பழசாகிவிடும். ஆனால், உறவு மட்டும்தான் நீண்ட காலம் இருக்கும்போது இன்னும் வலுவாகிறது, இன்னும் புதிதாகிறது. அப்படி நீண்ட காலம் ஓர் உறவு வலுப்பட வேண்டும் என்றால், பொய்யான எதுவும் அவர்களுக்குள் இருக்கக்கூடாது. உள்ளத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு உதடுகள் வேறொன்றைப் பேசக்கூடாது. கசப்பான விஷயங்களைக்கூட வெளிப்படையாகப் பேசமுடிகிற அளவுக்கு இருவரும் இருக்க வேண்டும்.

● மரியாதை கொடுங்கள். எந்த உறவையும் பிரிக்கமுடியாத பாசப்பிணைப்பாக மாற்றுவது, மரியாதை உணர்வுதான். உங்களுக்கு இடையே எவ்வளவு மோசமான முரண்பாடு வந்தாலும், நீங்கள் நேசிப்பவர் உங்களிடம் வெறுப்பு காட்டினாலும், நீங்கள் அவருக்குத் தரும் மரியாதை துளியும் குறையக்கூடாது. எப்படிப்பட்ட நேரத்திலும், அவரின் பாசிட்டிவ் பக்கங்களை மட்டுமே பாருங்கள். நீங்கள் எந்த அளவுக்கு அவரை மதிக்கிறீர்கள், எவ்வளவு ஆழமாக நேசிக்கிறீர்கள், எப்படிப்பட்ட அக்கறை காட்டுகிறீர்கள் என்பதை உணர்த்துங்கள். அதன்பின் அந்த உறவு வாழ்நாள் முழுக்க நீடிக்கும்.

● நெருக்கமான ஓர் உறவு என்றால், அவர் முகத்தைப் பார்த்தே அவர் மனதை உங்களால் படிக்க முடியும். அவர் சொல்லாமலே அவரின் உடல்நிலை சரியில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அவர் ஏதோ பண நெருக்கடியில் இருப்பதை, அவர் சொல்லாமலே அறிந்துகொள்வீர்கள். இப்படி ஓர் உறவு ஏதோ தடுமாற்றத்தில் இருக்கும்போது அவருக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் கோடீஸ்வரராக இல்லாமல் போகலாம். ஆனால், உங்களாலும் உறவுகளுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய முடியும். ●

குடும்ப உறவை மேம்படுத்துவது எப்படி?

கூட்டுக் குடும்பமாக இருந்தவரை குடும்பத்தில் குதூகலமும், பிரச்னைகளுக்குத் தீர்வும், குழந்தைகளுக்கு வழிகாட்டலும், ஒருவரையொருவர் மதிக்கும் பண்பும் தானாகவே வந்தது. தனிக்குடும்ப வாழ்வில் வசதிகள் கிடைத்தாலும், பிரச்னைகள் அதிகமாகத்தான் செய்கின்றன. சின்னச் சின்ன புரிதலற்ற முரண்பாடுகள், நாளடைவில் பெரிய விரிசலாகி விடுகின்றன. தீர்வைப் பற்றி யோசிப்பதை விட்டு, உறவு முறிவைப் பற்றிச் சிந்திக்கிறவர்களே அதிகமாகி விட்டார்கள். உறவுகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகுமே என யாரும் யோசிப்பதில்லை.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்ற பழமொழிக்கு இன்றும் மதிப்பு உண்டு. குடும்பத்தில் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் முதல் காரணமாக இருப்பவர்கள் பெண்கள்தான். குடும்பப் பொறுப்பில் இருக்கிற பெண்கள், குடும்ப உறவுகளை எப்படி மேம்படுத்த வேண்டும்?

வெளிப்படையாகப் பேசுங்கள்: திருமணம் வரை ஒரு பெண்ணின் வாழ்க்கையானது அப்பா, அம்மா, உடன்பிறந்தவர்களைச் சுற்றியே கழிந்திருக்கும். தன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும், தன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பெற்றோரைச் சார்ந்து இருந்திருக்கலாம். திருமணத்துக்குப் பிறகு, கணவர் என்கிற மையப்புள்ளியைச் சுற்றிச் சுழல வேண்டியிருக்கிறது. திருமணத்திற்குப் பிறகு வருகிற சின்னச் சின்ன பிரச்னைகளுக்கு முக்கியக் காரணமே, உள்ளதை உள்ளபடிக் கணவரிடம் சொல்லலாதே ஆகும். கணவர் மேல் வெறுப்பு ஏற்படுவதற்கோ, அல்லது அவருடன் பேசாமல் நிராகரிப்பதற்கோ ஆயிரம் காரணங்கள் ஒரு பெண்ணுக்கு இருக்கலாம். ஆனால், அந்தக் காரணங்களைக் கணவர் உணருமாறு செய்தால்தான் மறுமுறையும் அது போன்ற தவறு நிகழாமல் இருக்கும்.

புரிந்து கொள்ளுங்கள்: குழந்தைகள் இருக்கிற வீட்டில் பரபரப்பும் குதூகலமும் குடிகொண்டிருக்கும் என்பது உண்மைதான். குழந்தைகள் செய்யும் சேஷ்டைகள் ரசிக்கத்தக்கவை. ஆனால், எல்லா நேரமும் ரசிப்பது சாத்தியமில்லை. வேலைக்குப் போகிற பெண்கள் அவசர அவசரமாகச் சமையலை முடிக்க வேண்டும், அதற்குள் குழந்தையைப் பள்ளிக்கு ரெடி செய்து அனுப்பி விட வேண்டும். தொடர்ந்த வேலையிலும் அலைச்சலிலும் கோபமும் எரிச்சலும் உண்டாவது இயல்புதான். ஆனால், அந்தக் கோபத்தையும் எரிச்சலையும் குழந்தை மீது இறக்கி விடுவது கூடாது.

பள்ளி, ஸ்பெஷல் கிளாஸ், டியூஷன் என்று குழந்தைகளை எப்போதும் எதையாவது கற்றுக்கொள்ள வைக்க நினைக்கிறார்கள் பல பெற்றோர்கள். உண்மையில் இவ்வாறாகத் தொடர்ந்து பல வகுப்புகளுக்கு அனுப்பிவிட்டு, தங்களுக்கும் குழந்தைகளுக்குமான நேரத்தைச் சிறிதாகக் குறைத்துக் கொள்கின்றனர். இது சின்ன விஷயம் என்று விட்டு விடுகிறார்கள். ஆனால், இதுவே பின்பு பூதாகரமான விஷயமாக உருவெடுத்து குடும்பத்தில் அமைதி குலைவதற்குக் காரணமாகி விடும்.

குழந்தைகளோடு நேரம் செலவிடக் கற்றுக் கொள்ளுங்கள். புதியன சொல்லிக் கொடுங்கள். சிரித்து விளையாடுங்கள். ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டையும் தாண்டிக் குழந்தைகளிடம் பேசுவதற்கு விஷயங்கள் உண்டு. அவர்கள் ஒவ்வொரு நாளும் பள்ளியில் நிகழ்ந்த சுவாரசியமான சம்பவங்களை உங்களிடம் சொல்ல வேண்டும் என்கிற ஆர்வத்துடன் வருகிறார்கள். அதைக் கேட்டு மகிழுங்கள்.

ஆதரவாக இருங்கள்: பிறந்த வீட்டில் இருக்கிற வசதிகளும் வாய்ப்புகளும் புகுந்த வீட்டில் அப்படியே கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு பல பெண்களுக்கு உண்டு. புகுந்த வீட்டில் தன் எதிர்பார்ப்புக்கு மீறிய சின்ன நிகழ்வையும் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களாக குமுறுவதுண்டு. மாமியார் – மாமனாரை இன்னொரு பெற்றோராகக் கருதினாலே பெரும்பாலான பிரச்னைகள் முடிவுக்கு வந்து விடும். மருமகளைப் பற்றி அவர்களுக்கும் ஒருவித எதிர்பார்ப்பு இருக்கும். முதலில் அதைத் தெரிந்து கொள்ளுங்கள். அதன்பிறகு அவர்களிடம் நீங்கள் எதிர்பார்க்கிற விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள். அப்புறம் எப்படி வரும் பிரச்னை?

தனிக்குடித்தனம் போக நேர்ந்தாலும், மாமனார் – மாமியாரை அடிக்கடி சந்தித்து அவர்களிடம் ஆதரவாகப் பேசுங்கள். உங்கள் சூழலை அவர்களுக்குப் புரிய வையுங்கள். அப்போதுதான் நீங்கள் அவர்கள் மீது வைத்திருக்கும் மரியாதைக்கும் அன்புக்கும் அர்த்தம் அவர்களுக்குப் புரியும்.

தீர்வு கேளுங்கள்: வீட்டுப் பிரச்னைகளை வேலை செய்யுமிடத்திற்குக் கொண்டுபோவதும், அலுவலகப் பிரச்னைகளை வீட்டிற்குக் கொண்டு வருவதும்தான் சிக்கல்களைப் பெரிதாக்கும் விஷயம். வேலையில் ஆயிரம் டென்ஷன் இருக்கத்தான் செய்யும். அதை வீட்டிற்கும் கொண்டு வந்தால் பிரச்னை பெரிதாகுமே தவிர, குறையாது. கோபமாகப் பேசினால் குழந்தைகளே ரீயாக்ட் செய்ய நினைக்கும். பெரியவர்கள் மட்டும் எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள்? உங்கள் பிரச்னையைக் கோபமாக வெளிப்படுத்த வேண்டாம்; கேள்வியாகச் சொல்லுங்கள். ஒருவேளை கணவருக்கு, உங்களது பிரச்னைக்கான தீர்வு தெரிந்திருக்கலாம். கேளுங்கள், கிடைக்கும்.

உறவுகள் முக்கியம்: எல்லோருக்குமே உறவுகள் முக்கியம். சில சங்கடங்கள் நேர்ந்தாலும், அவர்கள் பல நேரங்களில் ஆதரவாக இருப்பார்கள்; அன்பையும் அள்ளிக் கொட்டுவார்கள். உறவினர்கள் இல்ல சுப நிகழ்ச்சிகளுக்குத் தவிர்க்காமல் செல்லப் பழகுங்கள். ஏனெனில், இதுபோன்ற விழாக்கள்தான் பல பிரச்னைகளுக்குத் தீர்வு தரும் இடமாகவும், பழைய பகைமையை மறந்து புதிய சந்தோஷத்தைப் பாய்ச்சும் இடமாகவும் இருக்கின்றன. உறவுகளின் நிகழ்ச்சிகளுக்கு குடும்பத்துடன் செல்வது அவசியம். தங்கள் சொந்த பந்தங்களைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் வாய்ப்பாகவும் இது அமைகிறது. ●

வாசகர் கடிதங்கள்

வணக்கம். நான் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், நல்முக்கல் இந்து அரசு நிதி உதவி தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர். ராம்ராஜ் காட்டனின் ‘வெண்மை’ மாத இதழ் அஞ்சல் மூலம் கிடைக்கப் பெற்றோம்! இந்தப் பொக்கிஷமான, பயனுள்ள மாத இதழை எங்களுக்கு அறிமுகப்படுத்திய தர்மபுரி மாவட்ட ஆசிரியை திருமதி. காயத்ரி அம்மாவிற்கு மனமார்ந்த நன்றி. நவம்பர் மாத ‘நவீன வாழ்வு சிறப்பிதழ்’ நம் பாரம்பரிய மதிப்புகளையும், நவீன வாழ்வின் அறிவியல் அற்புதங்களையும் இணைத்து வாழ வழிகாட்டும் இதழாகத் திகழ்கிறது. அனைத்துக் கட்டுரைகளும் மனத்தைக் கவர்கின்றன. அற்புதமான இந்தக் கருத்துகளைப் பள்ளி மாணவர்களிடம் கொண்டு சேர்த்து அவர்கள் எதிர்காலம் சிறக்க வழிகாட்டுவோம். நன்றி.

வணக்கம். நான் நாமக்கல் மாவட்ட மைய நூலக முதல் நிலை நூலகர் இரா.சக்திவேல். ‘வெண்மை’ இதழ் மாதம் தவறாது மைய நூலகத்திற்கு வருகிறது. இந்த இதழ்களை மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிளை நூலகங்களுக்கும் அனுப்பி வைக்கிறேன். நூலக வாசகர்கள் இதனைப் படித்து பயன்பெறுகிறார்கள். வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய செய்திகள், கருத்துகள் ‘வெண்மை’ இதழில் சிறப்பாக உள்ளன.

உறவுகளே உயிர்மெய்!

இனிய வாழ்க்கைக்கு சுமுகமான உறவு அவசியம். குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், சுற்றம் என எங்கும் உறவுகளை மேம்படுத்தச் சில குணங்கள் அவசியம். ஆங்கில எழுத்துகள் 26. அவற்றை வைத்து உருவாக்கப்பட்ட இந்த 26 வார்த்தைகள் அந்தக் குணங்களை உணர்த்தும்!

A **– Appreciation:** மற்றவர்களின் நிறைகளை மனதாரப் பாராட்டுங்கள்.

B **– Behaviour:** உங்கள் அணுகுமுறை அவர்களுக்கு இதம் தர வேண்டும். வார்த்தைகள், முகபாவனைகள், உடல்மொழி என எல்லாவற்றிலும் அன்பை வெளிப்படுத்துங்கள்.

C **– Compromise:** சின்னச் சின்னப் பிரச்னைகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். மனம்விட்டுப் பேசி எப்போதும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளுங்கள்.

D **– Depression:** உறவுகள் உங்களைப் புரிந்துகொள்ளவில்லையே என்று சோர்வடையாதீர்கள்.

E **– Ego:** மற்றவர்களை விட உங்களை உயர்வாக நினைத்துக்கொண்டு கர்வம் அடையாதீர்கள்.

F **– Forgive:** கண்டிக்கவும் தண்டிக்கவும் வாய்ப்பிருந்தாலும், மன்னிக்கும் வழியையே எப்போதும் தேர்வு செய்யுங்கள்.

G **– Genuineness:** எந்த விஷயத்தையும் எந்தப் பாரபட்சமும் இல்லாமல் உண்மையாகவும் நேர்மையாகவும் அணுகுங்கள்.

H **– Honesty:** தவறு செய்தால் நேர்மையாக ஒப்புக்கொண்டு உடனே மன்னிப்புக் கேட்பதைக் கௌரவமாகக் கருதுங்கள்.

I **– Inferiority Complex:** எவரையும் பார்த்துப் பிரமிக்காதீர்கள். நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்ற தாழ்வு மனப்பான்மை அடையாதீர்கள்.

J **– Jealousy:** பொறாமை வேண்டவே வேண்டாம். அது உங்களையே அரித்து ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும்.

K **– Kindness:** எல்லோரிடமும் கனிவு காட்டுங்கள். இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துங்கள்.

L **– Loose Talk:** சம்பந்தமில்லாமலும் அர்த்தமில்லாமலும் பின்விளைவுகளை அறியாமலும் உளற வேண்டாம்.

M **– Misunderstanding:** தவறாகப் புரிந்துகொண்டு எவரையும் புறக்கணிக்காதீர்கள். வெளிப்படையாகப் பேசி உண்மையை அறியுங்கள்.

N **– Neutral:** எப்போதும், எந்த விஷயத்திலும், யாருக்காகவும் நடுநிலை தவறாதீர்கள். முடிவு எடுத்துவிட்டுப் பேச வேண்டாம்; பேசிவிட்டு முடிவெடுங்கள்.

O **– Over Expectation:** அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பு வைக்காதீர்கள். தேவைக்கு அதிகமாக ஆசைப்படாதீர்கள்.

P **– Patience:** சில சூழல்களில் பொறுமையே பேராயுதம். சங்கடங்களைச் சகித்துக்கொள்ளுங்கள்.

Q **– Quietness:** பல பிரச்னைகளுக்குக் காரணம், தேவையின்றிப் பேசுவதுதான். உங்களுக்குத் தெரியாத விஷயங்களைப் பேசாமல் அமைதியாக இருந்துவிடுங்கள்.

R **– Roughness:** பண்பில்லாத வார்த்தைகளையும், முரட்டுத்தனமான செயல்களையும் தவிர்த்துவிடுங்கள்.

S **– Stubbornness:** நான் சொன்னதே சரி, செய்ததே சரி எனப் பிடிவாதம் பிடிக்காதீர்கள். உங்கள் வார்த்தைகளையும் செயல்களையும்விட உறவுகள் முக்கியம்.

T **– Twisting:** இங்கே கேட்டதை அங்கேயும், அங்கே கேட்டதை இங்கேயும் சொல்வது தவறு.

U **– Underestimate:** எவரையும் குறைத்து மதிப்பிடாதீர்கள். எல்லோருக்கும் உரிய மரியாதை கொடுங்கள்.

V **– Voluntary:** ஒரு உரசல் நடந்துவிட்டால், அடுத்தவர் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சை முதலில் தொடங்குங்கள்.

W **– Wound:** பேச்சும் செயலும் யார் மனதையும் காயப்படுத்தாமல் இருக்கட்டும்.

X **– Xerox:** உங்களை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ, அப்படியே மற்றவர்களை நடத்துங்கள்.

Y **– Yield:** முடிந்தவரை விட்டுக் கொடுங்கள். விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை.

Z **– Zero:** இவை அனைத்தையும் கடைப்பிடித்தால் பிரச்னை என்பது பூஜ்ஜியம் ஆகும். ●

அன்பு காட்டுவோம்!

சில உறவுகள் நமக்குப் புதிராகத் தெரிவார்கள். அவர்களின் இயல்புகள் நமக்கு விசித்திரமாகத் தெரியும். அவர்களின் நடவடிக்கைகள் விநோதமாக இருக்கும். காரணம், அவர்களுக்கு இருக்கும் பிரச்னைகள்தான். அவை என்னென்ன என உளவியல் நிபுணர்கள் பட்டியல் போடுகிறார்கள். அவற்றைப் புரிந்துகொண்டு நாம் அன்பு காட்டினால், அவர்களும் எல்லோரையும் போல இருக்க முடியும்.

புதிரான மனிதர்களைப் புரிந்துகொள்ள சில டிப்ஸ்:

- ‘இதெல்லாம் ஒரு ஜோக்கா’ என நீங்கள் புறக்கணிக்கும் நகைச்சுவைக்குக்கூட ஒருவர் விழுந்து விழுந்து சிரிக்கிறார் என்றால், அவர் மனதளவில் தனிமையை உணர்கிறார் என்று அர்த்தம். அந்தத் தனிமை உணர்வை ‘நான் இருக்கிறேன்’ என்ற அரவணைப்பால் சரி செய்யுங்கள்.
- ஒருவர் மற்றவர்களைவிட அதிகம் தூங்குகிறார் என்றால், அவர் துக்கத்தில் இருக்கிறார் என்று அர்த்தம். அந்தத் துக்கத்தைத் துடைத்துவிடுங்கள்.
- ஒருவர் மிகக் குறைவாகப் பேசுகிறார், அப்படிப் பேசும்போதும் மிக வேகமாகப் பேசுகிறார் என்றால், நிறைய விஷயங்களை ரகசியமாகப் பாதுகாக்கிறார் என்று அர்த்தம். ‘இப்படி எல்லாவற்றையும் மனதில் போட்டு வைத்தால் பாரம் தாங்காது’ என உணர்த்துங்கள்.
- ஒருவர் சோகத்தில்கூட அழவில்லை என்றால், அவருக்கு மிகுந்த மன உறுதி என அர்த்தமில்லை. அவர் பலவீனமாக இருக்கிறார் என்றே அர்த்தம். அவரின் பலமாக நீங்கள் இருங்கள்.
- ஒருவர் வழக்கத்தைவிட வேகமாகச் சாப்பிடுகிறார் என்றால், அவர் பதற்றத்தில் இருக்கிறார் என்று அர்த்தம். அந்தப் பதற்றத்தின் காரணம் அறிந்து தீர்த்து விடுங்கள்.
- சின்னச்சின்ன விஷயங்களுக்கு எல்லாம் ஒருவருக்கு நிறைய கோபம் வருகிறது என்றால், அவருக்கு அன்பு தேவைப்படுகிறது என்று அர்த்தம். அவருக்கு நிறைந்த அன்பைக் கொடுங்கள்.
- காது குத்தினால் குத்திய அடையாளம் காதில் இருக்கும். மூக்கு குத்தினால் அதன் அடையாளம் மூக்கில் இருக்கும். ஆனால், முதுகில் குத்தினால் அதன் அடையாளம் மனத்தில் மட்டுமே இருக்கும். அதை நம்மால் பார்க்க முடியாது. பேசிப் பார்த்தே கண்டறிய முடியும். இப்படிப்பட்ட வடுக்களைச் சுமப்பவர்களுக்கு ஆறுதலாக இருங்கள்.
- வாகனங்களை ஒழுங்காக ஓட்டுவதற்கு பிரேக் தேவை. ஆனால், அதை எப்போதும் பிடித்துக்கொண்டே வாகனத்தை ஓட்டினால் சீக்கிரம் வீணாகிவிடும். வாகனம் வேகமாகவும் போகாது, எரிபொருளும் அதிகம் செலவாகும். வாழ்க்கைக்கும் இது பொருந்தும். தேவைப்படுகிற இடத்தில், தேவைப்படுகிற நேரத்தில் மட்டும் பிரேக்கைப் பயன்படுத்தி, மற்ற நேரங்களில் இயல்பாக விட்டால் வாழ்க்கை வாகனமும் நன்றாக ஓடும். இதை உணர்த்தவும்.

மனிதர்களைப் பார்த்து ‘புதிர்’ என விலக வேண்டாம், புரிந்துகொண்டு அன்பு செலுத்துவோம்!

பேசாத வார்த்தைகளின் அர்த்தம் உணர்வோம்!

• வெளியில் விளையாடி விட்டு வேகமாக வீட்டுக்குள் ஓடிவரும் சிறுவன் நிகில், அம்மா என்ன சமைக்கிறார் என்று பார்க்கிறான். அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காத முள்ளங்கிச் சாம்பார். சோர்வாக ஹாலில் போய் உட்கார்ந்துகொண்டு டி.வி பார்க்கும் நிகில், "எனக்குப் பசிக்கலை, சாப்பாடு வேண்டாம்'' என்கிறான். விளையாடிவிட்டு அவன் பசியுடன் வந்ததை அவன் முகத்தைப் பார்த்தே அம்மா புரிந்துகொள்கிறார். முள்ளங்கி என்பதால் இப்படிப்பொய் சொல்கிறான் என்பதையும் உணர்ந்து, கத்தரிக்காய் பொரியலில் சாதத்தைப் பிசைந்து, நிகிலுக்கு மிகவும் பிடித்த முறுக்கு கொஞ்சம் நொறுக்கி கூடச் சேர்த்து வைக்கிறார். நிகில் உடனே ஆசையாகச் சாப்பிடுகிறான்.

• கடையில் போய் ஒரு குறிப்பிட்ட பிராண்ட் பொருளைக் கேட்கிறார் ஒரு குடும்பத் தலைவி. "வேற பிராண்ட் அதைவிட அருமையா இருக்கும். நீங்க கேட்ட பிராண்டை விட விலைக் குறைவு'' என எடுத்துக் காட்டுகிறார் கடைக்காரர். தான் கேட்ட பொருள் அந்தக் கடையில் இல்லை என்பதை உணர்ந்துகொண்டு, "பரவாயில்லை. அடுத்த வாரம் வர்றேன். நான் கேட்ட பிராண்ட் அதுக்குள்ள வந்துடுமா?" என்று கேட்கிறார் குடும்பத் தலைவி.

• கண்ணாடியை மாற்றுவதற்குப் புது ஃபிரேம் பார்க்கிறார் ஒரு முதியவர். ஒரு ஃபிரேம் அவருக்குப் பிடித்திருக்கிறது. ஆவலாக எடுத்து அதைச் சோதித்துப் பார்த்துவிட்டு விலை கேட்கிறார். கடைக்காரர் சொன்ன விலை, அவரது பட்ஜெட்டுக்கு ஏற்றதாக இல்லை. எனவே, ''இந்த மாடல் எனக்குப் பிடிக்கவில்லை. வேற காட்டுங்க'' என்கிறார். கடைக்காரர் இதைப் புரிந்துகொள்கிறார். அதே மாடலில் குறைந்த விலையில் உள்ள இன்னொரு ஃபிரேமைக் காட்டுகிறார். முதியவர் அதை வாங்கிக்கொள்கிறார்.

• கணவர் மாலையில் வீடு திரும்பியதும் வெளியில் கிளம்புவதாகத் திட்டம். ஆனால், "எனக்குக் களைப்பாக இருக்கிறது. அதனால் இன்று போக வேண்டாம்'' என்கிறார் வீடு திரும்பிய கணவர். "என்ன ஆச்சு, வேறு எதுவும் வேலை இருக்கிறதா?" என்று ஒரு கேள்வியைச் சாதாரணமாக எழுப்புகிறார் மனைவி. ''அதெல்லாம் இல்லை. தலை வலிக்கிற மாதிரி இருக்கு" என்கிறார் கணவர். மனைவி சற்று யோசித்துப் பார்க்கிறார். தன் நண்பர் கடன் வாங்கிய பணத்தைத் திருப்பித் தர இருப்பதாகவும், இன்று அதை வாங்கி வருவேன் என்றும் காலையில் கணவர் சொன்னது நினைவுக்கு

வருகிறது. "உங்கள் நண்பர் பணம் தரவில்லையா?" என்று விசாரிக்கிறார். "தரவில்லை" என்று ஒரு வார்த்தை பதில் வருகிறது. தன் கணவரின் 'களைப்பிற்கு' அதுதான் காரணம் என்று புரிந்துகொண்ட மனைவி, "கட்டாயம் உங்கள் நண்பர் பணம் தந்து விடுவார். கவலைப்பட வேண்டாம்" என்று சமாதானப்படுத்துகிறார். காபி போட்டுக் கொடுக்கிறார். அதன்பின் குடும்பமாகக் கிளம்பி வெளியில் செல்கின்றனர்.

● கமலாவும் விமலாவும் ஒரே தெருவில் வசிக்கிறார்கள். பல இடங்களுக்கு ஒன்றாகச் சென்று பழகியவர்கள். அதே தெருவில் இருக்கும் இன்னொருவர் குடும்பத்தில் ஒரு வளைகாப்பு நிகழ்ச்சி. அதற்குச் செல்வதற்காகக் கிளம்பிக்கொண்டிருந்த கமலா, செல்போனை எடுத்து விமலாவை அழைக்கிறாள். "நீ கிளம்பிப் போய்க்கிட்டே இரு கமலா. நான் பின்னாடியே வந்துடறேன்" என விமலாவிடமிருந்து பதில் வருகிறது. "பரவாயில்லை! நான் வெயிட் பண்றேன். நீ ரெடியானதும் சொல்லு! நாம கிளம்பலாம்" என்கிறாள் கமலா. அப்போதும் விமலா ஒப்புக்கொள்ளவில்லை. "இல்லை... இல்லை... நான் குளிச்சிட்டுக் கிளம்ப லேட் ஆயிடும். நீ முன்னாடி போ!" என்கிறாள். 'வேறு ஏதோ காரணம் இருக்கிறது' என்பது கமலாவுக்குப் புரிகிறது. பக்குவமாக விசாரிக்கிறாள். விசேஷம் நடத்தும் குடும்பத்தினருக்கும் விமலா குடும்பத்துக்கும் ஏதோ சண்டை. விமலாவை அவர்கள் அழைக்கவே இல்லை என்பது அப்போதுதான் தெரிகிறது.

● வீட்டு வேலை செய்யும் பணிப்பெண் திடீரெனச் சம்பள உயர்வு கேட்கிறார். ப்ரியாவுக்கு ஒன்றும் புரியவில்லை. பல வருடங்களாக வேலை செய்யும் அவருக்கு ஆண்டுதோறும் சம்பளத்தை உயர்த்துவது வழக்கம். மூன்று மாதங்களுக்கு முன்புதான் அப்படிச் சம்பளத்தை அதிகமாக்கிக் கொடுத்தாயிற்று. வீட்டில் வேலையும் அதிகமாகி விடவில்லை. "ஏன் இப்படித் திடீரென்று கேட்கிறாய்?" என விசாரிக்கிறாள் ப்ரியா. "எனக்குப் பணம் தேவைப்படுது" என்றாள் பணிப்பெண். "யாருக்குத்தான் பணம் தேவையில்லை? வேறு என்ன பிரச்னை? வீட்டுல யாருக்காவது உடம்பு சரியில்லையா என்ன?" என்று ப்ரியா கேட்கிறாள். அப்போதுதான் உண்மை தெரிகிறது. பணிப்பெண்ணின் குழந்தைக்கு உடல்நலமில்லை. சம்பளத்தில் முன்பணமாக ஆயிரம் ரூபாய் கொடுத்ததும் பிரச்னை தீர்ந்துவிடுகிறது.

● பக்கத்து வீட்டு நித்யா முன்பு போல இப்போது தன்னிடம் சரியாகப் பேசுவதில்லை என்பது உஷாவுக்குப் புரிகிறது. என்றாலும் பக்கத்து வீடாயிற்றே, இடைவெளி ஏற்படக்கூடாது என்று நினைக்கிறாள். ஒரு ஞாயிற்றுக்கிழமை தோட்டத்தில் இருக்கும்போது நித்யாவிடம் இயல்பாகப் பேச்சு கொடுக்கிறாள் உஷா. "நித்யா! நீ கட்டியிருக்கற புடவை நல்லா இருக்கே... எங்கே எடுத்தது?" என்று விசாரிக்கிறாள். "இதுவா நல்லா இருக்கு? 400 ரூபாய்தான். பிளாட்பாரக் கடையில எடுத்தது. பெரிய கடையில போய் காஸ்ட்லி புடவை எடுக்கறதுக்கு, உங்க வீடு மாதிரி எங்களுக்கு என்ன ரெண்டு வருமானமா கிடைக்குது?" என்கிறாள் நித்யா. இதைக் கேட்டு உஷா கோபப்படவில்லை. நித்யாவின் மனதுக்குள் வேறு ஏதோ வருத்தம் இருப்பதைப் புரிந்துகொள்கிறாள். மென்மையாக விசாரிக்கிறாள். நித்யாவின் கணவர் அவளை வேலைக்குச் செல்லச் சொல்லி வற்புறுத்துகிறார். உஷா போல அதிகம் படிக்கவில்லை என்பதால் அவளுக்கு வேலை சரியாக அமையவில்லை. அதனால் வீட்டில் அடிக்கடி சண்டை. நித்யா மீது அனுதாபம் கொள்ளும் உஷா, அவளுக்கு வேலை கிடைக்க வழிகாட்டுகிறாள். முன்பு போல இருவரும் நல்ல தோழியராகி விடுகின்றனர்.

சில சூழல்களில் சிலர் பேசுவது மட்டுமே உண்மை அல்ல. அவர்கள் சொல்லாமல் விட்டுவிட்ட சொற்களுக்குள் அர்த்தம் இருக்கும். நாம்தான் கவனமாக இருந்து, ஒளிந்திருக்கும் காரணத்தை அறியவேண்டும். யார் சொல்லும் காரணத்தையும் அப்படியே ஒப்புக்கொண்டால், நாம்தான் ஏமாந்து போவோம். 'சொல்வது உண்மைதானா, அல்லது அதன்பின் வேறொரு காரணம் ஒளிந்து இருக்கிறதா' என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். மேலோட்டமாகச் சொல்வதை ஆராய்ந்து, சூழ்நிலையை முற்றுமாகப் புரிந்துகொள்வது நல்லது. பல நேரங்களில் அதுவே உறவுகளைக் காப்பாற்றும். ●

உறவை மேம்படுத்தும் வலிமை எது?

பசு மாடு வைத்திருக்கும் ஒருவர், பால் கறந்து கொடுத்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். பசுவைப் பிடித்தபடி ரோட்டோரமாக நடந்தார் அவர். அமைதியாக அவர் இழுத்த இழுப்புக்கு வந்துகொண்டிருந்த பசு, வாகன ஹார்ன் சத்தத்தில் மிரண்டு திடீரென நடு ரோட்டில் நின்றுவிட்டது.

மிகவும் குறுகலான ரோடு அது. எல்லோருமே பரபரப்பாக அலுவலகம் செல்லும் காலை நேரம். அந்த ரோட்டில் சைக்கிள், பைக் தவிர வேறு எந்த வாகனங்களும் செல்லமுடியாதபடி பசு நடுரோட்டில் குறுக்கே நின்றது. பால்காரர் எவ்வளவு முயற்சி செய்தும், அதை அங்கிருந்து நகர்த்த முடியவில்லை. அவரை முட்டுவது போலத் தலையை ஆட்டிவிட்டு, அது அப்படியே நின்றிருந்தது. அதனால் மற்ற யாரும் அதை நெருங்கப் பயந்தனர்.

அந்த வழியாக ஒரு போலீஸ்காரர் வந்தார். தன் முரட்டு மீசையையும் கையிலிருந்த லத்தியையும் வைத்து மிரட்டிப் பார்த்தார். பால்காரரோடு சேர்ந்து பசுவை இழுத்துப் பார்த்தார். பசு அசையவில்லை.

கூட்டம் சேர்ந்து போக்குவரத்து ஸ்தம்பித்து இருப்பதைப் பார்த்து, மாட்டு வண்டிக்காரர் ஒருவர் வந்தார். “எவ்வளவோ முரட்டு மாடுகளை வழிக்குக் கொண்டுவந்தவன் நான். இது சாதாரணப் பசு மாடுதானே” என்றபடி அதை அதட்டிப் பார்த்தார். பால்காரரும் போலீஸ்காரரும் வண்டிக்காரரும் சேர்ந்து பசுவை இழுத்தனர். அது கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை.

ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பல காளைகளை அடக்கி ஏகப்பட்ட பரிசுகளை வென்ற ஓர் இளைஞன் அந்த வழியே வந்தான். ஒரு சாதாரணப் பசுவை ரோட்டிலிருந்து நகர்த்த மூன்று பேர் செய்து கொண்டிருக்கும் முயற்சிகளைப் பார்த்துச் சிரித்தான். “ஜல்லிக்கட்டுக் காளைகளையே ஓட ஓட விரட்டியவன் நான். இதெல்லாம் எனக்குத் தூசு மாதிரி” என்று சொல்லிவிட்டுப் பசுவை நெருங்கினான். அது அவனை அலட்சியமாகப் பார்த்துவிட்டு அப்படியே உட்கார்ந்து கொண்டது. அவனால் அதை ஒன்றும் செய்ய முடியவில்லை.

கூட்டம் சேர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு ஒரு சிறுவன் வந்தான். மற்றவர்களைப் போல அவன், பசு மாட்டின் அருகில் சென்று மிரட்டவில்லை. ரோட்டருகே வளர்ந்து நின்ற புற்களைப் பறித்துக் கட்டாகக் கட்டினான். அதைக் கொண்டுபோய்ப் பசுவின் முகத்தருகே காட்டினான். புல்லைச் சாப்பிடப் பசு எழுந்தது. புல் கட்டைப் பசுவிடம் காண்பித்தபடிச் சிறுவன் நடக்க ஆரம்பித்தான். பசுவும் அவனோடு நகர்ந்து ரோட்டோரம் வந்துவிட்டது. ‘இது நமக்குத் தோன்றவில்லையே’ என்று மற்றவர்கள் கூச்சத்துடன் தலைகுனிந்தனர்.

தங்கள் அந்தஸ்தைக் காட்டி, தங்களின் பொருளாதார வசதியை வெளிப்படுத்தி, தங்களின் அதிகாரத்தை உணர்த்தி, உறவுகளைத் தங்கள் இஷ்டப்படி வளைத்துவிடலாம் எனப் பலர் நினைக்கின்றனர். உறவிலும் நட்பிலும் அன்புப்பிணைப்பை இது எப்போதும் ஏற்படுத்தாது. அது உதட்டளவில் உரையாடும் உறவுகளை மட்டுமே பரிசளிக்கும். ஒருவரின் தேவையை உணர்ந்து நாம் காட்டும் பரிவும் அக்கறையுமே உறவுச்சங்கிலியை இறுக்கமாக்கும். உறவை மேம்படுத்தும் வலிமையான வழி இதுதான்.

Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL

SUKRA® SUPER FINE COTTON VESTS | ROMEX® SUPERIOR BANIANS | RISE-UP® PREMIUM BANIANS | ACOSTE® LUXURY INNERWEARS | Breeze® Eye Let Vests | WinStripe® STRIPED BANIANS | ARCHERY® GYM VEST | COMPACT® PREMIUM COTTON RIB VESTS | LITTLE STARS® KIDS INNERWEARS

Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-12-2025. Posted at Tirupur BPC on 5th of every month.